
# தீரா ஆசிரியம்

- பன்முக ஆளுமை -



உதவிக் கல்விப் பணிப்பாளர்

Dr. சத்தார் எம். பிர்தௌஸ் PhD (Sri Lanka)

## பணி நயப்பு விழா - 2022

முதன்மொழி ஆசிரிய மையம்
கல்முனை வலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீரா ஆசிரியம்

- பன்முக ஆளுமை -



உதவிக் கல்விப் பணிப்பாளர்

Dr. **சத்தார் எம். பிர்தௌஸ்** PhD (Sri Lanka)

பணி நயப்பு விழா - 2022

முதன்மொழி ஆசிரிய மையம்

கல்முனை வலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தீரா ஆசிரியம் |
| வகை | : | Dr. சத்தார் எம். பிர்தெளஸ் பணி நயப்பு விழா |
| மலராசிரியர் | : | ஜெஸ்மி எம். மூஸா |
| வெளியீடு | : | கல்முனை வலயக் கல்வி தமிழ்மொழி ஆசிரிய மையம் |
| அட்டை, கணனி வடிவமைப்பு | : | முபா (Mofa) |
| அச்சுப் பதிப்பு | : | Excellent Print - 0776401296 |
| முதற்பதிப்பு | : | 2022.12.31 |
| பிரதிகள் | : | 300 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தந்தை - முகம்மது யூசுப் லெப்பை
முகம்மது அப்துல் சத்தார்



தாய் - செய்யது அப்துல்லாஹ் மௌலானா
செய்யது ஜென்னத் உம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. வ. சுப்பிரமணியம் Rd. ADE (தமிழ்)
திரு. க. வரதராஜன் Rd. ADE (தமிழ்)
திருமதி. எச்.எம். முகைதீன் Rd. ISA (தமிழ்)

மூன்று மொழியியலாளர்களுக்கும்
இந்நூல் சமர்ப்பணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Dr. சத்தார் எம். பிர்தௌஸ்** PhD (Sri Lanka)
BA, PGDE, MA, M.Phil

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விழாவினர் :**

ஆலோசகர் :
**க. குணசேகரம்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

தலைவர் :
**ஜெஸ்மி எம். மூஸா**

செயலாளர் :
**எம்.எம்.ஏ. ஹக்கீம்**

பொருளாளர் :
**எம்.எம்.ஆர். ஹாமிலா**

எம்.எப்.எம். காசிம்
ஏ.ஆர்.ஏ. புஹாரி
வை.எம். அஷ்ரஃப்
திருமதி. கோ.சி. சிவசுந்தர மூர்த்தி
திருமதி. ஆர்.எம்.அக்றம்
எம்.எம். அஸ்லம் சஜா
எம்.ஐ.எப். மின்னா
ஐ.எல்.எம். தமீம்
ஈ.ஏ. முனீர்
ஐ.எல். அல்லாபிச்சை
எஸ். பிரேமினி
ஏ.எம். றியாஸ்
எம்.சீ.எம். உவைஸ்
எம்.ஐ.எம். இஸ்ஸதீன்
எம்.வை.எப். தஸ்ரிப்
ஏ. ஜெஸ்மிலா
எஸ். நவேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்விப் புலத்தின் திறமைமிகு ஆளுமை சத்தார் எம். பிர்தௌஸ்

**எம். எஸ். சஹுதுல் நஜீம்**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
கல்முனை.

தமது நாமத்தால் தலைநிமிர்ந்து நிற்கின்ற கல்வியலாளர்கள் வரிசையில் சத்தார் எம். பிர்தௌஸ் அதிக கனதியீர்ப்பைப் பெற்ற ஒருவர்.

சத்தார் எம். பிர்தௌஸை பாடசாலைக் காலம் முதலே நான் நன்கறிந்தவன். அவர் நல்லதொரு கலைஞன். அதிலும் குறிப்பாக பரத நாட்டியக் கலைஞன். அத்துறைசார் கலைஞர்கள் நேர்த்தி யானவர்கள். எதனையும் கூர்ந்துணரும் சுபாவம் உடையவர்கள். அத்தகைய ஒருவராகவே நாம் அவரை என்றும் காணுகின்றோம். அதனால்தானோ என்னவோ பிர்தௌஸ் ஓய்வு பெறும் காலத்திலும் துடிப்புள்ள இளைஞனாகவே நம்முன் தோன்றுகிறார்.

கல்முனை கல்வி வலயத்தில் பதினொரு வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் பணியாற்றிய அனுபவம் உள்ளவர் கலாநிதி சத்தார் எம். பிர்தௌஸ். கல்முனை வலயத்தின் பணிப்பாளராக நான் வந்த காலம் சொற்பமாயினும் அவருடன் பழகி, அவரைத் தெரிந்துகொண்ட காலங்கள் அதிகமானவை. இவ்வலயத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளராக இருந்து வலயமட்ட மேற்பார்வைக் குழுவினை வழிநடாத்திய காலத்திலும் சம்மாந்துறை வலயத்தின் பணிப்பாளராக இருந்து வளவாளராக அவரது பயன்களைப்பெற்ற காலங்களிலும் உதவிக் கல்விப் பணிப்பாளர் பிர்தௌஸை நான் நன்கறிந்தவன். மருதமுனையின் திறன்மிகு அடையாளமாக விளங்கும் இவர் பிரபல்யம் மிக்க தமிழ்ப்பாட ஆசிரியராக, சிறந்த மேடைப் பேச்சாளராக, கவர்ச்சிமிக்க அறிவிப்பாளராக எனப் பல தளங்களில் பயணித்துக் கொண்டிருப்பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த்துறையின் கலாநிதியாக உயர்ந்துள்ள அவர் பல்கலைக் கழகம், கல்விக் கல்லூரி முதலியவற்றின் வருகைதரு விரிவுரை யாளராகவும் தம் பணியை அகலமாக்கியுள்ளார். பன்னூலாசிரி யரான பிர்தௌஸின் கசடற, நிலைமாற்று முகவர் என்பன கல்விப் புலத்தினருக்கான பயன்மிகு வெளியீடுகளாகும்.

எடுத்த காரியத்தை செவ்வனே முடித்திடும் வல்லவரான பிர்தௌஸ் ஓய்வுபெற்றுச் செல்லும் ஒருவராகத் தென்படவில்லை. காரணம் அவரது இடைவிடாத செயற்பாடேயாகும். அவரது ஓய்வு வலயத்திற்குப் பேரிடை வெளியாகும்.

இன்று தமிழ்ப் புலத்திலுள்ள ஆசிரியர்கள் அனைவரும் ஒன்றித்து அவரது சொந்த மண்ணில் எடுக்கும் விழாவானது அவரது சேவைக்கான திறன்மிகு சான்றாகும். அன்னாரது ஓய்வுக்குப் பிந்திய காலப்பகுதிகள் குடும்பத்தாருடன் இணைந்த சமூக நகர்வுடன் கூடியதாக நகர எனது வாழ்த்துக்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர்

**பேராசிரியர் றமீஸ் அபூபக்கர்**

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

2017 ஆம் ஆண்டிலிருந்து தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வருகைதரு விரிவுரையாளராகக் கடமையாற்றி வரும் கல்முனை வலய தமிழ் மொழிப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் Dr. சத்தார் எம். பிர்தௌஸ் ஈழத்து தமிழ்த்துறை சார்ந்த ஆய்வாளர் களின் மிகுந்த கவனத்திற்குரியவர். இலக்கிய இலக்கணத்தில் நிறைந்த தேர்ச்சி பெற்றவர்.

இவரது பல்பரிமாண ஆற்றல்களை இனங்கண்டு கொண்ட தென்கிழக்குப் பல்கலைக் கழக சமூகம் கலை கலாசார பீடத்தின் மூன்று முக்கியத்துவம் வாய்ந்த சபைகளின் வெளிவாரி உறுப்பின ராக இணைத்துக் கொண்டு செயற்பட்டு வருவதை இச்சந்தர்ப் பத்தில் குறிப்பிட்டுக் காட்டுவதும், பாராட்டுவதும் தகுதியான ஒன்றாகும்.

01. கலை, கலாசார பீடத்தின் (Faculty Board) உறுப்பினராக கடந்த 2017.09.28இல் இருந்து இற்றைவரை இயங்கி வருகிறார்.

02. பட்டப்பின் படிப்பு சபையின் (Board of Study) உறுப்பினராக 2023.10.24 இல் இருந்து சிறப்பாகச் செயலாற்றி வருகின்றார்.

03. External Degree வெளிவாரிப்பட்டப்படிப்பு சபையின் உறுப்பின ராகவும் கடந்த 2021இல் இருந்து தனது பங்களிப்பினை நல்கி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை மாத்திரமல்லாது தென்கிழக்கு பல்கலைக் கழகத்திலிருந்து வெளிவரும் International Journal "கலம்" சஞ்சிகையின் Articles Reviewer ஆகவும், சர்வதேச எழுத்தாளர் மாநாடுகளின் ஆய்வு மதிப்பீட்டாளராகவும் செயற்பட்டுவருவது இவரது ஆற்றல்களுக்குச் சிறப்பாகச் சான்று பகர்கின்றன.

எங்களது பல்கலைகழக அறபு, இஸ்லாமிய பீடத்தின் தமிழ் மொழிப்பாட வருகை விரிவுரையாளராக இருந்து வரும் Dr. பிர்தௌஸ் பட்டதாரி மாணவர்களின் உள்ளக ஆற்றல்களை வெளிக்கொணர்வதிலும் ஈடுபாடு காட்டிவருபவர். மாணவர்களை இணங்காண்பதோடு அவர்களது படைப்புகளை நூலுருவாக்கம் செய்வதிலும் FIA **மாணவர் ஆய்வு மன்றத்தின்** மூலம் வெளியீடு செய்தும் பராட்டுக்குரியதாகும்.

31.12.2022 இல் தான் நிரந்தரமாக வகித்து வந்த உதவிக்கல்வி பணிப்பாளர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றாலும் பல்கலைக் கழக விரிவுரையாளராக ஓய்வு பெறமாட்டார் என்பது எனது அசையாத நம்பிக்கையாகும்.

அன்பும், அரவணைப்பும், விடா முயற்சியும் பரோபகார சிந்தனையும் கொண்ட விழா நாயகன், Dr. சத்தார் எம் பிர்தௌஸ் அவர்களின் பணி நயப்பு விழாவிற்கு ஆசிச்செய்தி வழங்குவதை இட்டு நான் மட்டில்லா மகிழ்ச்சியடைகிறேன். அவரது ஓய்வுகாலம் சிறப்பாக அமைய வல்ல அல்லாஹ்வை வேண்டுகின்றேன்.

**பேராசிரியர் Dr. றமீஸ் அபூபக்கர்**
உபவேந்தர்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
ஒலுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அட்டாளைச்சேனை
ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் அதிபர்
**எம்.எச். அன்வர் சதாத்** (SLTES)
அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

கல்முனை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி சத்தார் எம். பிர்தெளஸ் அவர்களின் பிரியா விடை "தீரா ஆசிரியம்" விழா மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பெரு மகிழ்வடைகிறேன்.

நாடக கலைஞரும் இலக்கிய வாதியுமான இவர் தமிழ் பேசும் உலகிற்கு ஓர் ஒளி விளக்காய் விளங்குகிறார்.

கல்முனை வலய மாணாக்கரின் கல்வி உயர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்ததோடு மட்டுமல்லாது இவரின் சேவை பரந்துபட்டு 2015இல் அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலையையும் எட்டியது. அன்றுதொட்டு இன்றுவரை சுமார் ஏழு வருடங்களாக தமிழ், ஆரம்பக்கல்வி, இஸ்லாம் போன்ற பாடநெறிப் பயிற்சி ஆசிரியர்களின் பொதுத் தமிழ், விஷேட தமிழ், இரண்டாம் மொழி தமிழ்ப் பாட அறிவினை மேம்படுத்துவதில் அவரது பங்கு அபரிவித மானது. சிங்கள மாணவர்களுக்குத் தமிழ் கற்பிப்பதில் மிகுந்த தேர்ச்சி கொண்டவர் பிர்தௌஸ்.

"நபிமார்கள் தங்க நாணயத்தையோ அல்லது வெள்ளி நாணயத் தையோ வாரிசாக விட்டு செல்லவில்லை அவர்கள் வாரிசாக விட்டுச் சென்றதெல்லாம் அறிவையேயாகும் அதனைப் பெற்றுக் கொண்டவர் பெரும் பேற்றைக் கொண்டவராவர்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அபுதாவுத் அஹ்மத்)

இக்கூற்றின் போதனைக்கமைய மாணவ ஆசிரியர்களுக்கும் சிறப்பான முறையில் வழிகாட்டி சிறந்த கல்விச் சமூகத்தை கட்டியெழுப்பிய இவரது பணிகள் ஓய்வின் பின்பும் தொடர இறைவனை பிரார்த்திக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆழிப் புயலுக்குப் பின்னர் நவ சகோதரர்களை ஆற்றுப்படுத்திய எங்கள் மூத்த சகோதரன்

**சத்தார் எம். சதாத்** BA (Hons), PGDE, M Ed.
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியல் கல்லூரி, மட்டக்களப்பு.

சிறந்ததொரு கலாநிதி, கல்வியியலாளன், விரிவுரையாளர், மதிப்புக்குரிய கலைஞன், எழுத்தாளன், கவிஞன் என பல் பரிமாணம் கொண்ட எனது அன்புக்கும் பாசத்திற்கும் உரித்தான சத்தார் எம். பிர்தௌஸ் என்ற எனது மூத்த சகோதரனை வாழ்த்தி வழி அனுப்ப வந்திருக்கும் உங்களோடு நானும் கைகோர்த்து பலர் அறிந்திராத அவரின் தனிப்பட்ட தியாக வாழ்வினை தொட்டுச் செல்லவென நவ சகோதர்களில் ஒருவராக நானும் விழைகிறேன்.

அந்த வகையில் 1978ஆம் ஆண்டில் ஆழிப்புயலில் தந்தையினை இழந்த தலைமகனாய் மறுநாள் மலர்ந்த விடியலுக்கு தனது வகிபாகம் மாறி சிறு வளர்ந்தவனாய் மற்றும் ஒரு அனாதைத் தலைவனாய் பல வினாக்களோடு விடியல்கள் நீண்டபோது கண்முன் நின்ற பாதைகளில் கல்விக்கான பாதை மட்டும் இருள் சூழ்ந்து இருட்டானபோது நகர முடியாமலும் எமை நகர்த்த முடியாமலும் தனி மரமாய் ஒரு விதவைத் தாயுடன் குஞ்சுகளின் பிஞ்சுத் தலைவனாய் அதுவரை வாழ்ந்த தந்தைசார் அழகிய வாழ்வு அறுந்துபோக அசையாத திமிருடன் உயர பறக்க விழைந்தவன் இவன் என்பதை மெய்சிலிர்ப்புடன் பரிமாற விளைகிறேன்.


"தக்கார் தகவிலர் என்பது
அவரவர் எச்சத்தால் கொள்ளப்படும்"

என்ற வள்ளுவன் வாய்மொழிக்கேற்ப முத்து என பெற்றெடுத்த மூன்று பிள்ளைகளும் நன்னிலை பெற்று சட்ட வல்லுனராய், வைத்தியக் கலாநிதியாய் நீண்டு செல்லும் அவரது குடும்ப வாழ்வு தனது பணி வாழ்வின் சிறப்பினை பிரதிபலிப்பது அந்த வல்லோனின் ஆசிபெற்றவர் என்பதையும் பறைசாற்றுகின்றன.

மணி விழா காணும் எனது சகோதரன் இப்போது போலவே எப்போதும் இளமைத் துடிப்புடன் இன்னும் சிறப்பினை கல்வி உலகுக்கும் ஆத்மிக மெய்யுலகுக்கும் ஆற்ற வேண்டும் என ஆசிகூறி விடைபெறுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூன்று தசாப்தங்களை நிறைவுறுத்திய கல்வியலாளரின் ஓய்வு...

**ஜெஸ்மி எம். மூஸா**
முதுகலை தத்துவமாணி (தமிழ்)
முதுகலைமாணி (தமிழ்)
கலைமாணி (தமிழ்-சிறப்பு)

"அவர் நடந்தால் புல்லும் சாகாது. அவ்வளவு நல்ல மனிதர் அவர்" என்னும் விரட்டு வார்த்தைகளைப் பொய்யாக்கி, விரிந்து செல்கிற உலகத்தினை வரவேற்கும் விந்தையர் நாம். அடையாளங்களை எச்சமாக்கி விட்டுச் செல்பவர்களே எதிர்காலத்தின் சொந்தக்காரர்கள் என்பதான கொள்கையின் அடித்தளமான ஆதரவாளர்களையே உருவாக்க எத்தனிக்கும் உலக ஒழுங்கின் கௌரவங்களே போற்றலுக் குரியவர்கள். அத்தகையோர் வரிசையில் கலாநிதி சத்தார் எம். பிர்தௌஸ் முக்கிய அடையாளத்திற்குரியவர்.

## பிறப்பும் குடும்பமும்

1978 ஆம் ஆண்டு சூறாவளி நமது நாட்டிற்கு ஒரு சம்பவமாயினும் பிர்தௌஸ் சேருக்கு அதுவே சரித்திரமாகியது. அவ் அனர்த்தத்தில் 39 வயதான தந்தையை இழந்த அவர் ஆறு பெண்களையும் ஆண் களையும் வழிநடத்தும் பெரும் சுமையினைத் தம்முள் தாங்கிக் கொண்டார். மட்டக்களப்பு கல்வியற் கல்லூரி உப பீடாதிபதி சத்தார் எம். சதாத், மரபுக் கவிஞரும் கைக்கூக் கவிஞருமான பிரபல்ய ஆங்கில ஆசிரியர் சத்தார் எம். அசாத் உட்பட தமது சகோதரிகளில் இருவர் பட்ட தாரிகளாக அரச தொழிலில் மிளிரவும் தம்மை அர்ப்பணித்தார். இளைய சகோதரரான சத்தார் எம். முஜீப் சிறந்த உதைபந்தாட்ட வீரராகத் திகழ்வதுடன் 1999 இல் கோலூன்றிப் பாய்தலில் தேசிய மட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக்கொண்டார். பல்வேறு இக்கட்டான சூழ்நிலைகளைச் சந்தித்த போதும் கல்வி யினைத் தொடர வேண்டுமென்ற முனைப்பு, பல்கலைக்கழக உள்நிலை சாராத மருதமுனையின் முதலாவது கலாநிதி என்ற அந்தஸ்த்தை அவருக்கு ஈட்டிக் கொடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனையின் பிரபல்யம்மிக்க PSC இயரின் குடும்பமான முகம்மட் சாலியின் மகளான எம்.எஸ். சித்தி சபீனாவை காதல் மனைவியாக ஆக்கிக்கொண்ட பிர்தௌஸ் சட்டமாணி சட்டத்தரணி அனோஜ், கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன் அகமட் டீடாட், அல்-மனார் மத்திய கல்லூரி (தே.பா) தரம்-08 மாணவன் றெயா அகமட் ஆகியோரின் அன்புத் தந்தையானார்.

## பாடசாலையும் உயர்கல்வியும்

நூற்றாண்டு கடந்து நிற்கும் அல்-மனார் மத்திய கல்லூரியின் ஆளுமைகளுள் ஒருவராகப் பார்க்கப்படும் பிர்தௌஸ் அப்பாட சாலையின் மாணவத் தலைவர், கலை இலக்கிய குழுவின் முதன்மை யாளர் உள்ளிட்ட பதவிகளை அலங்கரித்ததுடன் கவிதை, நாடகம், அறிவிப்பு, சஞ்சிகையாக்கம் அடங்கலான பல்வேறு துறைகளிலும் தம்மை அடையாளம் காட்டினார்.

1984ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழக மாணவனாக உள்வாங்கப்பட்ட பிர்தௌஸ் சேர் கலைத்துறைப் பட்டதாரி யாக வெளியேறியதோடு நின்றுவிடாமல் தாம் சார்ந்த தமிழ்த் துறையின் காதல் காரணமாக முதுகலைமாணி, முதுகலை தத்துவமாணி ஆகிய பட்டங்களைப் பெற்றுக்கொண்டு கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் படிப்பைத் தொடர்ந்தார். தொடரான ஊக்கமிகுதியால் 2014ஆம் ஆண்டு தமிழ்த்துறையின் கலாநிதியாக அடையாளமானார்.

1990.03.20இல் மருதமுனையின் மற்றுமொரு கல்வி ஊற்றான சம்ஸ் மத்திய கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்று ஒன்பது ஆண்டுகள் சிறப்புப்பணி செய்ததன் பின்னர் 10.11.1999 இல் ஆசிரிய ஆலோசகராக கல்முனை வலயக் கல்வி அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டார். பின்னர் தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் வரை தம்மை உயர்த்திக் கொண்ட கலாநிதி பிர்தௌஸ் வலயத்தில் பணியாற்றிய காலத்தில் 'நிலை மாற்று முகவர்" (2010), கசடற (2020) ஆகிய நூல்களை வெளிக்கொணர்ந்து கல்விப் புலத்தினரின் பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாறை மாவட்டத்தில் மாத்திரமன்றி ஈழத்தின் பல்வேறு மூலைகளிலும் பிரத்தியேக கற்பித்தல் பணியினை தொடர்ந் தேர்ச்சி யாக செய்து வந்ததன் மூலம் கல்விப்புலத்தின் உயர் நிலையிலுள்ள மாணவர்கள் பலரின் இதயங்களில் கௌரவமாக அமர்த்திருப்பவர் சத்தார் எம். பிர்தௌஸ்.

தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவினை பூர்த்திசெய்த பிர்தௌஸ் துறைசார் தகைமையும் தொழிற் தகைமையும் மேலோங்கி இருந்தமையால் தென்கிழக்குப் பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளர், அட்டாளைச் சேனை கல்வியியற் கல்வி வருகைதரு விரிவுரையாளர் (17 வருடங்கள்) ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் என தம் கல்விப்பணியினை அகலமாக்கினார். இக்கல்விப் பீடங்களில் நீண்ட மாணவர் பரம்பரையினையொன்றினை தமக்குள் அடக்கிக் கொண்ட பிர்தௌஸ் மாணவர்களின் இணைப் பாடவிதான செயற்பாடுகளின் ஊக்கியாகவும் செயற்பட்டார். கல்வியியற் கல்லூரி தவிர்ந்த ஏனையவற்றில் விரிவுரையாளராக தொடர் பணியாற்றி வருவது சிறப்புக்குரியது. தென்கிழக்குப் பல்கலைக் கழக கலைப்பீட சபை, பட்டப்பின் படிப்பு சபை, வெளிவாரி கற்கை நெறிச் சபை ஆகியவற்றின் உறுப்பினராகவும் தெரிவாகி பல்கலைக்கழக மட்டத்தில் கௌரவமான பணியினை மேற்கொண்டு வருகின்றார்.

ஆசிரிய ஆலோசகராக பதவி வகித்த காலத்தில் ஜனாதிபதி சந்திரிக்கா வினால் (2002) "வித்தியா பிரசாதினி" விருது வழங்கி கௌரவிக்கப் பட்டமை கல்முனை கல்வி வலயத்தின் தமிழ்த் துறைக்கான வரலாற் றுத் தடயமாகும்.

கல்முனை கல்வி வலயத்தில் தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகராக மற்றும் உதவிக் கல்விப்பணிப்பாளராக பணியாற்றிய 23வருட காலத்தில் சிறந்ததொரு வளவாளராக, ஆசிரிய கண்காணிப் பாளராக, அறிவிப்பாளராக, ஆசிரியர் வாண்மைவிருத்தி நூல் வெளியீட் டாளராக, கலை நிகழ்வுகளின் ஒழுங்கமைப்பாளராக துறைசார் முதலாவது கலாநிதியாக எனப் பல தளங்களில் கல்முனை கல்வி வலயத்தில் பயணித்த பிர்தௌஸ் கல்விப் பணியில் 33 வருடங் களையும் வலயப் பணிமனையில் 23 ஆண்டு களையும் கடந்திருப்ப தென்பது சாமான்யமான செய்தியல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடனம்

இறைவன் மனிதர்களுக்கு வழங்கிய அருள்களில் கலையும் ஒன்று. முஸ்லிம்களில் விரல் விட்டெண்ணும் சிலரே இத்துறையில் பிரபல்யம் பெற்றவர்கள். இளம் வயதிலிருந்தே ஒரு நடனக் கலைஞனாக வேண்டு மென்ற தாகம் அவரிடம் இருந்தது. பாடசாலை மேடைகளையும் வெளி கலை நிகழ்வுகளையும் அதிகம் பயன்படுத்தி அதில் வெற்றியும் கண்டார். அவரது ஆர்வத்திற்கு உரமூட்டியதுபோல் இலங்கையின் முன்னணி நடன ஆசிரியையாகத் திகழ்ந்த நிருந்தகி வசந்தி சபாநாதனின் மாணவனாகும் பாக்கியம் அவருக்குக் கிடைத்தது. நடனத்தை முறையாகக் கற்ற ஒரே ஒரு முஸ்லிம் மாணவனாகத் திகழ்ந்த இவர் யாழ்ப்பாண வட இலங்கை சங்கீத சபையின் 3ஆம் தரங்களைப் பூர்த்தி செய்த மாணவராகவும் இலங்கினார்.

கல்முனை மற்றும் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பல நடன அரங்குகளைச் சந்தித்த பிர்தௌஸ் அன்றைய கல்வி அமைச்சர் ராஜ மனோகரி புலேந்திரனால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். தம்மால் பயிற்றுவிக்கப்பட்ட பரம்பரையொன்றை உருவாக்கிய போதிலும் கலாசார தடைகளை மிகைக்காதவராய் அத்துறை யிலிருந்து 2000 களில் தம்மை விடுவித்துக் கொண்டார்.

## அறிவிப்பு

பாடசாலை மட்டத்தில் விழாக்கள் பலவற்றில் அறிவிப் பாளராகத் தோன்றிய சத்தார் எம். பிர்தௌஸ் நிகழ்வுகள் பலவற்றையும் தொகுத்தளிக்கும் வான்மைமிக்கவராக சமூக மட்டத்தில் இனங்காணப் பட்டார். 1988ஆம் ஆண்டு அறிவிப்புத் துறையில் ஆர். பிரேமதாசா வினால் ஜனாதிபதி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் அத்துறைக்கான தேசிய அங்கீகாரமாகவே கொள்ளலாம்.

எடுத்த காரியத்தை செம்மையாக செய்து முடிக்கும் திறன் கலாநிதி பிர்தௌஸிடம் இருப்பதற்கு அவரிடம் இருந்து பல்துறை ஆற்றல் பிரதானமானவை. கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் நினைவாக தமிழ் செம்மொழி விழாவினை 19.07.2010 அன்று விபுலானந்தர் பிறந்த காரைதீவு மண்ணில் நடத்தியது. அன்றைய மாகாணக் கல்விப் பணிப்பாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ரி.ஏ. நிஸாம் தலைமையில் நடந்தேறிய இப்பெருவிழாவில் புதுவைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் எ. அறிவுநம்பி, இ. வெங்கடேசன், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கே. பிறேம் குமார், தென்கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தர் ஹூசைன் இஸ்மாயில் ஆகியோர் உட்பட ஈழத்துப் பேராசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

பெரியநீலாவணையிலிருந்து காரைதீவு வரை ஊர்திகள் பவனிவர பேராசிரியர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். இப் பெருவிழாவின் போது "மகர நாதம்" சிறப்பு மலர் வெளியீட்டு வைக்கப்பட்டது. இதன்போது விழா ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதான செயற்பட்டாளர்களில் ஒருவராக வலயத்தின் அப்போதைய ஆசிரிய ஆலோசகர் என்ற வகையில் கலாநிதி பிர்தௌஸின் பங்களிப்பு அபரீதமானது. பல வாரங்களாக இரவு பகலாகப் பாடுபட்டதோடு உதவிக் கல்விப் பணிப்பாளராக தம் பணியினை மிகவும் அர்ப்பணிப் புடன் செய்து முடித்தார். இந்நிகழ்வுகளை அறிவிப்பாளராக நின்று தொகுத்து வழங்கியமை விழாவின் சிறப்பம்சமாகப் பார்க்கப் பட்டது.

இந்நிகழ்வில் ஒரு சிறந்த அறிவிப்பாளராக உள்நாட்டு, வெளி நாட்டுப் பேராசிரியர்களின் கவனத்தை ஈர்த்துக்கொண்ட விழா நாயகன் இவ்வலயத்தில் நடைபெற்று முடிந்த பெரும் விழாக்களின் தொகுப் பாளராகவும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராகவும் 30 வருடங்களுக்கும் மேலாகப் பணியாற்றிய பெருமைக்குரியவர் என்பது மறுதலிக்க முடியாத தடயமாகும்.

## நடிப்பு

கலைக் குடும்பமொன்றின் பின்னணியில் வந்தவர் சத்தார் எம். பிர்தௌஸ். மருதமுனையைச் சேர்ந்த நடிகர்களான மனாப் மற்றும் கல்வியிலாளர் முஸ்லிம் ஆகியோரின் சகோதரர்களின் மகனான விழா நாயகன் இளம் வயதிலிருந்தே நடிப்புத் துறையிலும் ஆர்வம் காட்டினார். மருதமுனை சம்ஸ் மத்திய கல்லூரியில் ஆசிரியராக இருந்த காலத்தில் நாடகங்கள் பலவற்றை நடித்துள்ளதுடன் அரங் கேற்றியும் காட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான நடிப்பார்வம் திரைப்பட நடிகனாக வேண்டுமென்ற எண்ண அலைகளை அவருக்குள் ஏற்படுத்தியது. அழகிய குரல் வளம், நடன ஆற்றல், நடிப்புத்திறன் இவையெல்லாவற்றிற்கும் மேலாக வசீகரமான முகபாவமும் உடலமைப்பும் கொண்ட விழா நாயகனுக்கு கதாநாயனாகும் தகைமைகள் எல்லாமே வாய்க்கப் பெற்றிருந்தது. தொழிநுட்ப முன்னேற்றமில்லாத 1980 களில் மருதமுனையைச் சேர்ந்த வை. கே. றஹ்மான் இயக்கிய "சலனங்கள்" குறுந்திரைப்படத்தின் கதாநாயகன் பாத்திர மேற்றதன் மூலம் தம் ஆசைக்கு களமேற்படுத்திக் கொடுத்தார்.

2010 இல் மருதமுனை நிஜாம் றைஸ் இயக்கிய "திருடன்" என்ற திரைப் படத்திலும் முக்கிய பாத்திரமேற்றார். நடிப்புத் துறையின் பங்களிப்புக் காக தேசிய ரீதியில் "சிறந்த தனி நடிகர்" விருதினை 1988இல் பெற்றுக் கொண்டமை அவருக்கு ஆறுதலளித்து விட்ட கௌரவமாகும். ஒரு பிரபு தேவாவாக, சப்பத் ராஜாவாக வர வேண்டிய பிர்தௌஸ் ஈழத்து கட்டுப்பாடுடைய சூழலிலும் தம்மை இவ்வாறெல்லாம் அடையாளப் படுத்தியமை அவரை ஒரு முற்போக்குக் கலைஞனென அடையாளப் படுத்தக் கூடிய சான்றாகும்.

### இலக்கியத்துறையும் நூல்களும்

ஈழத்தின் விரல்விட்டு எண்ணக்கூடிய இலக்கிய விமர்சகர் பரம்பரையில் கலாநிதி சத்தார் பிர்தௌஸூக்கும் இடமுண்டு. அதிகமான நூல்களுக்கு நயப்புரை மற்றும் விமர்சன உரைகளை எழுதி வருவ துடன் வெளியீடுகளில் காத்திரமான மேடை விமர்சகராகவும் சிறப்புப் பணியாற்றி வருகின்றார். எழுத்தும் பேச்சும் ஒன்றிணைந்த வரம் பெற்ற விமர்சகர்கள் ஈழத்துச் சூழலில் அரிது. அத்தகையவர்கள் வரிசையில் இவரும் ஒருவர்.

இளம் படைப்பாளிகளின் படைப்புக்களை தட்டிக் கொடுப் பதில் தாராள மனம் கொண்டவரான பிர்தௌஸ் மேடை விமர்சனத் துறையில் ஓயாத பணியாற்றி வருகிறார். அவரது தலைமையில் நூல் வெளியீடுகள் பல கனதி கண்டிருக்கின்ற மையும் குறிப்பிடத்தக்க பரிமாறலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களின் வாண்மை விருத்தியின் தகவல் களஞ்சியமாகக் கொள்ளப்படும் 'திசை மாற்று முகவர், (2010) என்ற நூல் இவரது வெளியீடுகளில் முக்கியமானது. கல்முனை வலயத்தில் கல்விக்காக சிறப்புப் பணிபுரிந்த 155 சான்றோர்களை அடையாளப்படுத்தி கௌரவிக்கும் முகமாக வெளிவந்த 'கசடற' என்ற நூல் கல்விப் புலத்தில் பிர்தௌஸின் நாமம் உரைக்கும் கத்திரமான பணியாகும். கல்வித்துறையின் மிக முக்கியத்துவமுடைய நுண்ணாய்வு நூலாக இது கொள்ளப்படுகின்றமை சிறப்புக்குரியதாகும்.

ஒரு நூற்றாண்டு கடந்த கிழக்கிலங்கையின் 62 நாவலாசிரியர் களின் 131 நால்களை முறையியலுக்குட்படுத்தி ஆய்வு செய்த பிரதேச ரீதியில் நாவலாளர்களை ஆய்வுக்குட்படுத்திய முதலாவது நாவலாய்வு நூலான "கிழக்கிலங்கை தமிழ் நாவல்கள் - சமூக, அரசியல் நோக்கு" என்ற நூலை ஈழத்து ஆய்வுப் பரப்பிற்குத் தந்த பெருமைக்குரியவர் சத்தார் எம். பிர்தௌஸ்.

**அரசியல் விமர்சகர்**

தமது பேச்சாற்றலை இலக்கிய மேடைகளோடு நிறுத்தி விடாமல் அதனை அரசிய லுக்காகவும் பயன்படுத்தியர் கலாநிதி பிர்தௌஸ். முன்னாள் அமைச்சர்களான ஏ.எல்.எம். அதாஉல்லா, எம்.ரி. ஹசனலி ஆகியோரின் கல்விப் பிரிவுக்கான இணைப்பாளராகப் பணியாற்றிய துடன் அவர்களது மேடைகளில் முழங்கும் பீரங்கிப் பேச்சாளரா கவும் மாறினார்.

பிரபல்யமிக்க ஒரு ஆசிரியராக, வலயக் கல்விப் பணிமனையின் திறன்மிக்க பணிப்பாளராக, நேர்த்தியான விமர்சகராக, அவை யோரைக் கவர்ந்தேற்கும் மேடைப் பேச்சாளராக, கவர்ச்சிமிக்க அறிவிப்பாளராக, நடனக் கலைஞராக, சிறந்த நடிகனாக, ஆய்வாள ராக, அரசியல் விமர்சகராக, பன்னூலாசியராக எனப் பல தளங்களில் பயணித்த கலாநிதி சத்தார் எம். பிர்தௌஸ் தம் ஆளுமையினைப் பரப்பிவிட்டு 31.12.2022 இல் அரச சேவைக்கு ஓய்வுகொடுக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிர்தௌஸ் சேர் ஓய்வு பெறுகிறாரா?" என ஆச்சரியக் குறி மேலிட வைக்கும் அவரது தோற்றம் என்றும் ஆரோக்கியமானதே. தினமும் சைக்கிள் சவாரி செய்யும் இளைஞனாகவே அவர் நகர்ந்து கொண்டிருக்கிறார். தம்முடைய பணிகளுக்கு அப்பால் என்றும் தம் மனையாளின் காதல் நாயனாக, திருப்தியுள்ள தந்தையாக பயணித்துக் கொண்டிருக்கும் அன்னாரது ஓய்வுக்குப் பிந்திய காலம் ஆரோக்கியமானதாகவும் இனிமையானதாகவும் மிளிர கல்முனை கல்வி வலய தமிழ் மொழி ஆசிரியர் மையத்தின் மனம் நிறைந்த வாழ்த்துக்களும் பிரார்த்தனைகளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்முனை கல்வி வலய
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிருவாகம்)

**எஸ்.எல்.ஏ. றஹீம்**

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

பாடசாலைக் காலத்திலிருந்து பல்கலைக்கழகம் புகும்வரை வகுப்புத் தோழனாக என்னுடன் இருந்து வந்தவர் நண்பர் பிர்தௌஸ். பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் எமது நட்புத் தொடர்ந்தது. இருவரையும் ஆளாக்கி விட்ட மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் எனக்கு அதிபராகும் வாய்ப்பும் பிர்தௌஸுக்கு பாடசாலை கருத்திட்ட இணைப்பாளராகும் வாய்ப்பும் ஒரே சந்தர்ப்பத்தில் வாய்த்தது. மாத்திரமன்றி ஒரே வலயத்தில் பணியாற்றி ஓய்வுபெறும் பாக்கியமும் எமக்குக் கிட்டியுள்ளமை பேறாகும்.

பாடசாலை முதல் ஓய்வு வரை என்னுடன் இணைந்துவிட்ட நண்பனான சத்தார் எம். பிர்தௌஸ் இளம் வயதில் தந்தையை இழந்து குடும்பச் சுமையினை தாங்கிக் கொண்டவர். வறுமையினை சவாலாகக் கொண்டு வீறுபோட்ட அவர் தமிழ்த்துறையின் கலாநிதி வரை உயர்ந்து அத்துறையில் அகலக் கால்பதித்திருப்பது நம்மில் பலருக்கும் முன்னுதாரணமாகும்.

கல்முனை கோட்டத்தின் கல்வி முன்னாள் பணிப்பாளர் ஏ.எல்.சக்காப், றகுமான் ஏ. ஜபார், ஆகவே ஜபார், அறநிலா, சத்தார் எம். பிர்தௌஸ் எல்லோரும் வகுப்புத் தோழர்கள். இவர்களிடம் அப்போதிருந்து தொடர்ந்த இலக்கிய ஆர்வமே பிர்தௌஸ் போன்றோரை ஆளுமைகளாக வளர வைத்தது எனலாம்.

பல்வகை ஆளுமை கொண்ட நண்பர் பிர்தௌஸுக்கு தமிழ்த் துறை ஆசிரியர்கள் ஒன்றிணைந்து விழா எடுப்பது மகிழ்ச்சிக் குரியது. இம்மலருக்கு நண்பர் என்ற முறையிலும் பிரதிக் கல்விப் பணிப்பளராகவும் நின்று ஆசிரியுரை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றேன். அவர் இனிமையானவர் அவரது ஓய்வுக்குப் பிந்திய காலம் மேலும் சிறக்க பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முத்தமிழிற்கு ஒரு போதும் ஓய்வில்லை...

**Y. ஹபீபுள்ளாஹ்** (BBA) (Hons), MCom, MBA
கணக்காளர்,
வலய கல்வி அலுவலகம், கல்முனை.

"முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி அகத்தானாம்
இன் சொல்லினதே அறம்"

என்னும் திருவள்ளுவரின் இனியவை கூறலிற்கு முற்றுமுழுதான சொந்தக்காரனாக பிறருடன் முகத்தால் விரும்பிப் பழகுவதுடன் அவர்கள் யாராக இருந்தாலும் இனிமையாக அவர்களுடன் கலந்து பேசி உள்ளத்தால் அவர்களுடன் இனிய தமிழில் உரையாடுகின்ற வல்லமை கொண்ட சத்தார் எம். பிர்தௌஸ் என்னும் பன்முக ஆளுமை இன்று சுற்றுநிருபத்தின் தேவைக்காக பதவியிலிருந்து ஓய்வுபெறுகின்றமைக்காக வெளியிடப்படும் இந்நூலிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பெருமை கொள்கிறேன்.

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிற்கும் சொந்தக் காரனாக தனது தமிழ்ப்பணியினை மிகச்சிறப்பாக ஆற்றி ஓய்வு பெறுகின் றமை இவரது பன்முக ஆளுமையின் வெளிப்பாடாகவே நான் உணர்கின்றேன். அவர் மேடையில் தொகுப்பாளனாக வருகின்ற போதெல்லாம், 'தமிழ் இவனால் இனித்ததை' விட வேறு 'இயல்' என்னதான் வேண்டும். மேற்கத்தேய நடனம் அறிமுகமான காலங்களில் அதில் சிறப்புத் தேர்ச்சிபெற்ற நடனக் காரனாக தன்னை வெளிப்படுத்தியது மாத்திரமன்றி பரதநாட்டியத்திலும் தனக்கென தனியானதொரு இடம்பிடித்திருந்தார். மருதமுனையில் வை.கே. றஹ்மானின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட முதலாவது தமிழ்த்திரைப்படத்தில் கதாநாயகன் வேடமேற்று நடித்து தனது நடிப்புத் துறையினையும் மிக அழகாக வெளிப்படுத்தியிருந் தமை அவர் முத்தமிழிலும் அவரது ஈடுபாட்டினை அறியக்கூடிய வாய்ப்பினை எமக்குணர்த்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வலயக்கல்வி அலுவலகத்திற்கு கணக்காளராக வருவதற்கு முன்பே எனது சிறுபராயத்திலிருந்து உறவுக்காரன் என்னும் வகையில் பழகியவன். பின்னைய காலங்களில் பல தனியார் கல்லூரிகளிலே கற்பதற்காக ஒன்றிணையும் வாய்ப்பும் கிடைத் திருந்தது. அக்கால கட்டங்களில் அவர் தமிழினைக் கற்பிக்கும் போதெல்லாம், அப்பாடத்தின் கருப்பொருள் எதுவோ அதுவாக தன்னை உருமாற்றி குரல் மாற்றி எழிமையாக்கி மாணவர் களுக்கு கற்பித்ததனால் தமிழ் இன்னும் இப்பிராந்தியத்தில் இனித்துக் கொண்டிருக்கிறது.

ஆசிரியராக தொடங்கிய அவரது பணி, PhD பட்டம் வரை சென்றது மாத்திரமல்லாது பல்கலைக் கழகங்களில் வருகை தரு விரிவுரையாளராக இன்றும் பணிதொடர்வது அவருடைய திறமைக்குக் கிடைத்த வெற்றியாகவே காண்கின்றேன்.

தமிழப் பாடத்திற்கான உதவிக் கல்விப்பணிப்பாளராக கடமை புரிந்த காலங்களுள் சுமார் இரண்டு வருடங்கள் கணக்காளராக அவரோடு இணைந்து பணியாற்றியமை எனக்குக் கிடைத்த மகிழ்வான தருணமாகவே நான் கருதுகின்றேன். சத்தார் எம். பிர்தௌஸ் இன்றும் இளைஞனாக, இரு சக்கர வண்டியில் தினமும் பல மைல்கள் ஓடித்திரிவது இறைவன் அவரது நல்ல இதயத்திற்குக் கொடுத்த பரிசாக நான் உணர்கின்றேன். வாழ்தலில் முக்கிய அம்சமான தடம் பதித்தல் என்னும் கோட் பாட்டிற்குச் சொந்தக் காரனாக வாழ்ந்து கொண்டிருக்கும் பன்முக ஆளுமை சத்தார் எம். பிர்தௌஸ் என்னும் முத்தமிழிற்கு ஓய்வில்லை. எனினும் பணி ஓய்விற்குப் பின்னரான வாழ்க்கை மேலும் வளமாக அமைய வேண்டும் என வாழ்த்துகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் சார்பாக...

# பிரியமுடன் கையசைக்கும்.....



**பைந்தமிழ்க் குமரன் டேவிட்**
கோட்டக்கல்வி பணிப்பாளர்,
காரைதீவு கோட்டம்.

நீண்ட பல வருடங்களுக்கு முன்பதாக பாசமிகு நண்பன் சக்காப் எங்களை அறிமுகம் செய்து வைக்கின்றான். "ரெண்டு பேரும் தமிழ் பைத்தியங்கள் தான். நல்லா ஒத்துப் போகும்" என்று வேறு சொல்லி வைத்தான். அந்த நாள் முதல் தொடர்கின்ற அன்புப் பயணத்தில் என்றுமே மறக்க முடியாத மனப்பதிவுகளை வரைந்து விட்டவன் நண்பன் பிர்தௌஸ். இப்படி "அவன்" என்று அழைப்பதற்கு எனக்கு மட்டுமே உரிமையுண்டு. அத்தகைய நட்பு. ஆழமான பாசம். அதையும் தாண்டி தமிழ்மொழித் தாயின் தவப்புதல்வர்கள், நல்ல படைப்பாளிகள், சுவைஞர்கள், கலைஞர்கள், விமர்சகர்கள் ஏன் சிலரின் பார்வையில் வீணர்களும் கூட.

மற்றுமொரு கல்வி வலயத்தில் தமிழ் மொழி ஆசிரிய கல்விவள ஆலோசகராக நான் சேவையாற்றிய காலம் அது. கல்முனை வலயத்தில் தமிழ்மொழி கல்விவள ஆலோசகர் நண்பன் பிர்தௌஸ் பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் பலவற்றில் கலந்தும் மீண்டும் நடாத்தியும் ஒன்றாக பயணித்த நாட்கள் ஏராளம். ஏராளம் அதையும் தாண்டி தமிழ்ப்பாட பகுதிநேர விரிவுரையாளர்களாக கற்பித்த காலங்கள் மனக்கண்முன் நிழலாடும் நினைவுகளாக வருகின்றன. எனது கானல் வசந்தங்கள் சிறுகதை நூலுக்கு அவன் வழங்கிய விமர்சன உரை அபாரம். அன்பானவன், பண்பானவன், கண்ணியத்திற்குரியவன் நண்பன் பிர்தௌஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னாளில் மேலே, மேலே சென்று கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும் தனதாக்கிக் கொண்டான். அன்பான மனையாள், ஆளுமைமிக்க சாதனைப்பிள்ளைகள் அவன் தேடிய செல்வங்களாகும்.

குறுகிய வட்டங்களுக்குள் குதிரையோட்டிக் கொண்டிருப்பவனல்ல பிர்தௌஸ். எல்லை தகர்த்து விட்டு தனக்கான வெளியில் பட்டாம் பூச்சியாய் சிறகடிக்கும் சிந்தனா வாதியவன். அன்பு நண்பன் பிர்தௌஸ் அகவை அறுபதை அடைத்து விட்டானா? வினாக்கள் எனக்குள் விரிகின்றபோது என்னையே திரும்பி பார்க்கின்றேன்.

அன்பு நண்பனே, பைந்தமிழ்க் குமரனும் பைத்தமிழ்கிழவனாகி விட்டான். இன்னும் நீண்ட ஆயுளும், உடல் உள நலங்களும் பெற்று பல்லாண்டுகள் நீ வாழ வேண்டும். நிச்சயம் நீ வாழ்வாய் ஏனென்றால் நீயும் நானும் தமிழை நேசிப்பவர்கள் தமிழை யாசிப்பவர்கள், தமிழை சுவாசிப்பவர்கள்.

வாழ்த்துக்களுடன் கையசைக்கும்,
**பைந்தமிழ்க்குமரன் டேவிட்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# *Retirement Message of Appreciation*

**M.M. KALEEL**
ADE English,
Zonal Education Office,
Kalmunai.

I am so much delighted to write this retirement message of appreciation to my best friend Dr. Firthouse . He has completed successful career being as the ADE for Tamil subject in Kalmunai zone for nearly 23 years under 11 Zonal Directors. He rendered his yeoman service for the betterment of our students in the zone just like me. The subject performances attained every year at the GCE (O/L) and GCE (A/L) examinations are the evidence of his pinnacle of success. Alhamdhulillah.

We entered into this noble profession through the competitive examination and the interview held for the same. The officers who were in service at that time had already gone on retirement. Now it's time for us to leave and make way to the newly recruited gentlemen.

Dr. Firthouse is an unforgettable friend of mine throughout my career. Just like me he was appointed as a teacher of English but later he changed his subject and became a well versed Tamil subject teacher and excelled in the field. As far as I know he is the highly regarded and qualified educator being a PHD holder in his field of Tamil Language and served in our Kalmunai zone.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It is so pleasure to mention here in this message of appreciation that he is one of the best colleagues I have worked with. We had gone through tough times but we have seen better days. It's not so easy to say goodbye but I will hold on to the fond memories of working with you.

You have a good sense of humour and shared shared so many funny jokes even among our busy schedule that made everyone to be in a state of amusement. I truly appreciate the effort you put into mentoring many in your field.

" Sir, you are leaving a good legacy of commendable work ethic and excellent service delivery. We hope you will continue to impact society with your great zeal."

Congratulations, you are now free. No more meetings. No more deadlines and no more bossy bosses. Enjoy your retirement life.

I miss you so much.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலாநிதி சத்தார் பிர்தௌஸின் தொடர்நலன் நிலைக்க வாழ்த்துக்கள்

**திரு. க. குணசேகரம்** MA, (T.Ed.)
உதவிக் கல்விப்பணிப்பாளர்

நண்பன் கலாநிதி சத்தார் எம். பிர்தௌஸ் அவர்களுக்கு மணிவிழா நடைபெறுவதனையும், அதன் வெளிப்பாடாக மலர் வெளியிடுவ தனையும் நினைத்து அகமகிழ்கின்றேன். இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகளை முன்னின்று செயற்படுத்துகின்ற கல்முனை கல்வி வலய முதன்மொழி ஆசிரிய மையத்தினருக்கு மனமுவந்த பாராட்டுக்கள்.

நண்பன் பிர்தௌஸ் அவர்களை நான் 1985 முதல் அறிந்தவன் நான் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் "இளங்கலைமாணி" கற்கை நெறியைப் பயின்ற காலத்தில் இவரது சகலன் நண்பன் ஐ.எல்.ஏ. கரீம் அவர்கள் என்னுடன் பயின்றவர். எனது கனிஷ்ட மாணவனாக இணைந்து கொண்டவர்களில் பிர்தௌசும் ஒருவர் அன்று முதல் ஆரம்பித்த நட்பு தொடர்ந்தது, தொடர்கின்றது.

எனக்கு கல்முனை கல்வி வலயத்துடனான தொடர்பு 1990ல் கல்முனை கல்வி மாவட்டத்தில் நடைபெற்ற மாவட்ட மட்டத் தமிழ் மொழித் தினப்போட்டி நடுவர் பணியுடன் ஆரம்பம். அப்பணி தொடர்கின்றது. கல்முனை பிரதேசத்தில் றியோ கல்வி நிலையம், அல்பா கல்வி நிலையம் என்பவற்றில் 1992 தொடக்கம் 2012 வரை கற்பித்தவன். அதன் ஆரம்ப கால கட்டங்களில் போக்கு வரத்து சீரற்ற நிலை காரணமாக துவிச்சக்கர வண்டி மூலமே எனது பயணம். (மாங்காடு தொடக்கம் கல்முனை வரை) அவ்வேளை களில் இவரைச் சந்தித்து அளவளாவுவதுண்டு. அக்கால கட்டத்தில் இருந்த பிர்தௌசும் பிரத்தியேக வகுப்புகளில் பிரவேசித்து, பிரகாசித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிர்தௌஸ் 1990ல் ஆசிரியராக நியமனம் பெற்றவர். நான் 1998ல் ஆசிரிய ஆலோசகராக கல்குடா கல்வி வலயத்தில் பணி புரிய இவர் 1999களில் ஆசிரிய ஆலோசகராக நியமனம் பெற்று கல்முனை கல்வி வலயத்தில் பணி புரிந்தவர்.

நல்லாசன், ஆசிரிய ஆலோசகன், உதவிக் கல்விப் பணிப்பாளர், பல்கலைக்கழக விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசலை பகுதிநேர விரிவுரையாளர் எனப் பல பணிகள் மாணவர் பலருக்கும் பயன் கிடைப்பு. மாணவர் பலர் நற்பதவிகளில் அமர்வு. சிறந்த பேச்சாளனாய், விமரிசகனாய், கலைஞனாய். சமூக சேவகனாய் பிறபணிகள்.

மகிழ்வூர்தி ஒட்டுநரின் மகனாகப் பிறந்த நண்பன் பிர்தௌஸ் 1978 (23.11.1978) சூறாவளியின் போது தந்தையை இழந்தான் துயருற்றான். தாய் தையல் பயிற்சி பெற்றிருந்ததால் அத்தொழிலின் விளைவு இவரதும், சகோதரர்களதும் உணவு, கல்விப்பசி தீர்ப்பு அதன் விளைவு சமூக நல்லிருப்பு. இவர் கலாநிதி பட்டம் வரை படிப்பு, மாணவர், நண்பர் குழாம் அதிகரிப்பு.

இல்லற இணைவோ பேசப்படுகின்ற குடும்பத்தில் ஒற்றுமை, நல்லுறவுக்கு எடுத்துக்காட்டான குடும்பம். நல் இல்லாள் கிடைப்பு. இல்லறம் நல்லறமாய் மிளிர்ந்ததன் பேறு ஆண் மகவு மூன்று முதன்மை சொத்துக்கள். இவர்கள் கல்வி கேள்விகளில் உயர்ச்சி தொடர் முயற்சி மூத்த மகன் இல்லறத்தில் இணைவு பேரப்பிள்ளை களைப் பெற்று மகிழும் இன்ப வாழ்வு இவை கிடைத்தற்கரியவை பிர்தௌசுக்கு கிடைத்தமை இறை அருள்.

காலம் தோறும் மாகாணக் கல்வி திணைக்களம், கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், கல்முனை கல்வி வலய தமிழ் மொழிப்பாட செயலமர்வு என என் சந்திப்பு. அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஓய்வு) வ.சுப்பிரமணியம் அவர்களின் பணித்தொடர்ச்சிக்கு, நண்பன் க.வரதராஜன் பணி ஏற்பு அதனைத் தொடர நண்பன் வரதராஜனுடன் ஒன்றாகப் பணிபுரிந்த கலாநிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தார் பிர்தௌஸ் பணி ஏற்பு. என் சுகவீனம் காரணமாக கல்முனை கல்வி வலயத்தில் நான் இணைவு. தமிழ்ப்பாட மேம்பாட்டுக்கு தமிழ்ப்பாட ஆசிரிய குழாமுடன் அலுவலகமும் துணை இருப்பு.

அகவை அறுபது நிறைவில் அரசபணி விடைபெறல் பணிப்பு அதன் விளைவு பிர்தௌசுக்கும் அரசபணி நிறைவு. கல்விப்பணி, சமூகப்பணி தொடர முஸ்தீபு, அதற்கு இறையருளும் துணைபுரிய விருப்பு தொடரட்டும் நற்பணிகள் என் நட்பும் தொடரும் எனக்கு ஏற்பட்டதுபோல் அசுகம் ஏற்படாமல் தேக ஆரோக்கியத்துடனும், மன மகிழ்வுடனும் நண்பன் பிர்தௌஸ் நீண்டகாலம் வாழவேண்டும் என இறைவனைப் பிரார்த்திப்பதோடு மனமுவந்த நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அல் மனாரின் வலுவூட்டப்பட்ட பாடசாலை மேம்பாட்டுத்திட்ட இணைப்பாளர்

**எம்.ஜே. அப்துல் ஹஸீப்** B.Sc., BAd., SLPS-I
அதிபர், அல்-மனார் மத்திய கல்லூரி, மருதமுனை.

இரு முறை இப்பதவியை வினைத்திறன் மிக்க வகையில் செயற்படுத்தி அல்-மனாரின் கல்வி அடைவுமட்ட உயர்வுக்காகவும் பௌதீகவள மேம்பாட்டிற்காகவும் அயராது உழைத்தவர் Dr. சத்தார் எம். பிர்தௌஸ்.

தரம் 01 தொடக்கம் 13ஆம் வகுப்பு வரை இப்பாடசாலையிலேயே கல்விகற்று பேராதனைப் பல்கலைக்கழகம் சென்றார். பின்னர் ஆங்கில ஆசிரிய நியமனம் பெற்று மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் பத்து வருடங்கள் கடமையாற்றிய பின்னர் 10.11.1999இல் ஆசிரிய ஆலோசகராகச் சென்று அதன் பின்னர் தமிழ்மொழி உதவிக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி 31.12.2022இல் ஓய்வுபெற்றுச் செல்லும் கலாநிதி பிர்தௌஸை அல்-மனார் கல்விச் சமூகம் அன்பு கனிய வாழ்த்துகிறது.

மருதமுனை மக்கள் முன்னெடுக்கும் செயற்திட்டங்கள் எதுவாக இருந்தாலும் அதில் முன்னின்று பாடுபடும் ஒருவராகவும் முயற்சியாளனாகவும் பிர்தௌஸ் காணப்படுகிறார். சுனாமிக்குப் பின்னரான இக்கட்டான சூழ்நிலைகளில் இப்பாடசாலையை நிலைநிறுத்தப் பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர். மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆ பள்ளிவாசலின் டிரஸ்டியாகவும், தற்போதைய கட்டடக் குழுச் செயலளராகவும் சிறப்பாக இயங்கிவரும் எனது நண்பன் எப்போதுமே பாடசாலை பற்றிய என் ஆலோசகராக, உந்து விசையாக விளங்குவதை என்னால் மறக்க முடியாது.

ஆசிரியர்களது கற்றல் கற்பித்தல் தொடர்பில் மிகுந்த கண்டிப்பும் அக்கறையும் கொண்டதோடு ஆசிரியர்களைக் குட்டிக் குனிய வைக்காமல் எப்போதுமே தட்டிக்கொடுத்து ஊக்கப்படுத்திக் கொண்டே இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-மனாரின் SDC செயலாளராக S.L.A. றஹீம் அதிபரோடு இணைந்து செயட்பட்டபோது பௌதீகவளத் தேவைகளை நிறை வேற்றவும் பாடுபட்டவர். பாடசாலை காலங்களில் இருந்தே கலை நிகழ்ச்சிகளிற்கான பங்களிப்பினைச் செய்து பௌதீக வளத்தேவை களுக்கு உதவியுள்ளதோடு மொழிப்பாடக் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து "W" நிலை மாணவர்களின் நலனுக்காக தொடர்ச் சியாய் உழைத்துக் கொண்டிருக்கிறார்.

பல்கலைக்கழக வருகை விரிவுரையாளராகவும் கல்விக் கல்லூரியின் பகுதி நேர விரிவுரையாளராகவும் இருந்து வரும் கலாநிதி சத்தார் எம். பிர்தௌஸ் எமது மண்ணுக்குக் கிடைத்த மொழிச்சொத்து என்பதில் ஐயமில்லை. அன்னாரின் ஓய்வு கல்முனை வலயத்திற்கு இழப்பாக இருந்தாலும் அவரது சேவையானது பல்கலைக் கழகங்களுக்கு தொடர்ச்சியாக இருக்கட்போகிறது என்பதில் மகிழ்ச்சி. அவரை அன்புடன் வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸம்ஸ் மத்திய கல்லூரியும் கலாநிதி. சத்தார் எம். பிர்தௌஸும்

**H. நைறோஸ்கான்** SLEAS
உதவிக் கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்வி அலுவலகம்,
சம்மாந்துறை

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இறுதியாண்டு மாணவனாக இருக்கும் போதே ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்று (1990) எங்கள் பாடசாலைக்கு வந்த இன்றைய விழா நாயகன் பிர்தௌஸ் சேர், சம்ஸ் மத்திய கல்லூரியில் எனக்கு ஆங்கிலம் கற்பித்த ஆசிரியர் மட்டுமல்ல இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் என்னை ஈர்த்தெடுத்தவர் என்பதிலும் சந்தேகமில்லை.

நமது பிரதேசத்து A/L மாணவர்கள் தமிழ் பாடம் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லாமையால் கல்விக் கல்லூரியின் வாய்ப்புகளைத் தவற விட்டிருந்த தருணத்தில் தான் பட்டதாரியாக வெளியேறிய கையோடு தமிழ் பாடத்தைத் தேர்ந்தெடுக்க நேர்ந்தது இந்தத் தெரிவிற்கு வற்புறுத்தி இணையவைத்தவர் எஸ்.எல்.எம். ஜலால்டீன் அதிபர் அவர்களே என்பதை அடிக்கடி சொல்லிக்கொள்வார்.

தமிழ் கற்பிக்கும் அவரது விஷேட ஆற்றலால் கிழக்கிலங்கையின் எல்லாப் பாகங்களிலும் இவரால் மீண்டும் இனித்தது தமிழ். சம்ஸ் மத்திய கல்லூரியில் கற்பித்த எல்லா ஆண்டுகளிலும் அதி உச்ச பட்ச சித்தி வீதத்திற்கு குறையவில்லை.

ஆங்கில ஆசிரியராக இருந்து பின்னர் பட்டதாரி ஆசிரியராகக் கடமையாற்றிய 1990-1999 வரையான காலப்பகுதியில் பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக பாடசாலை மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு விருத்திக்காகச் செய்த பங்களிப்புகளில் சிலவற்றை மாத்திரம் எடுத்துக்காட்டுவது அவசிய மானதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *1990 ஆம் ஆண்டு 20' X 60' பரப்புடைய கட்டிடம் ஒன்று தோன்ற காலாக அமைந்த **"கலைக் கோலங்கள்"** நிகழ்ச்சிக்கு மேடை நடனங்களையும், நாடகங்களையும் தயாரித்து வழங்கியமை.*

- *1994.03.16 இல் இடம்பெற்ற **"மின்னும் மின்னும் தாரகைகள்"** கதம்ப நிகழ்ச்சியில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக இருந்து பங்களிப்புச் செய்ததோடு 100 கதிரைகள் பெறுவதற்கு உதவினார்.*

- *1992 ஆம் ஆண்டு நடைபெற்ற **"மும்மொழி கலைவிழா"** நிகழ்ச்சியின் குழு உறுப்பினராக செயற்பட்டதோடு அதன் மூலம் எஞ்சிய பணத்தில் பாடசாலை சுற்றுமதில் அமைக்க வழிவகுத்தமை.*

- *1990 தொடக்கம் 1999 வரையான காலப்பகுதியில் முதல் இரு வருடங்கள் பாடசாலையின் **ஆசிரிய சங்க செயலாள ராகவும், பின்னர் இறுதிவரை பொருளாளராகவும்** கடமை யாற்றி பாடசாலையின் பௌதீக வளர்ச்சிக்கு பங்காற்றியமை.*

- *பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொருளாளராக இருந்து 1998 காலப்பகுதியில் சில தனவந்தர்களை அணுகி அவர்களிட மிருந்து கிடைக்கப்பெற்ற பணத்திலிருந்து தற்காலிக கொட்டில் களை அமைப்பதில் பாடசாலை சமூகத்தோடு இணைந்து செயற்பட்டமை.*

*இவை மாத்திரமன்றி*

- *6 தொடக்கம் 11 ஆம் தரங்களைச் சேர்ந்த மாணவர்களிடையே **இலக்கிய மன்றத்தை** ஏற்பாடு செய்து கவிதை, கட்டுரை, நாடகப் போட்டிகள் போன்றவற்றை நடாத்தி அதற்கான பரிசுத் திட்டத்தையும் அமுல் நடாத்தினார். இப்போட்டிகளிற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சாரணர் மாணவர் சங்கத்தை ஏற்பாடு செய்து மாணவர்களைக் கொண்டு Job Card வேலைத் திட்டத்தை உருவாக்கி அதன் மூலம் பெற்ற வருமானத்தில் பாடசாலையின் பூந்தோட்டத்தைப் பராமரிப்பதற்கு ஏதுவாக இருந்தார்.

- சூழல் சுற்றாடல் மாணவர் படையணியினை ஏற்பாடு செய்து அதன் மூலம் பாடசாலையின் உள்-வெளிச் சூழலை அழகு படுத்துவதற்கு மாணவர்களை வேலைத்திட்டத்தில் ஈடுபடச் செய்தார்.

- மாணவத் தலைவர்கள் சங்கத்தை ஏற்பாடு செய்து அதனூடாக மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சியினை வழங்கி தலைமைத்துவப் பண்புகளை மாணவர்களிடையே ஏற்படுத்தி ஒழுக்கத்தை அமுல்படுத்தினார்.

இவ்வாறு Teachers Role ஐ முழுமையாக Practice பண்ணிய ஒருவராகவே எனது ஆசான் திகழ்ந்திருக்கிறார்.

மீராப்பிள்ளை அதிபர், மருதூர் கொத்தன் அதிபர், A.M.A. சமட் அதிபர் ஆகிய மூவரது வழிகாட்டல்களையும் மறக்க முடியாதென்று கூறும் விழா நாயகன் மருதூர் கொத்தன் அதிபர் தலைமையில் சம்ஸ் மத்திய கல்லூரியின் 35வது ஆண்டு நிறைவை ஒட்டி வெளிவந்த **"எழுவான்"** சஞ்சிகைக்கு ஆற்றிய பங்களிப்பு முக்கியமானதாகும்.

ஆசிரியர் என்பதற்காப்பால் ஆளுமை மிகுந்த ஆய்வாளராகவே தன்னை முழுமையாக மாற்றிக் கொண்ட கலாநிதி சத்தார் எம் பிர்தௌஸ் ஆசிரிய ஆலோசகராக 10.11.1999 இல் பதவியேற்று அன்றைய அதிபர் A.M.A. சமட் மற்றும் தனது மாணாக்கர்களது அன்பிற்கு கட்டுப்பட்டு தொடர்ந்தும் மாலை நேர வகுப்புகளை மேற்கொண்டு அந்த வருடத்திற்குரிய மாணவர்களையும் பல்கலைக் கழகம் நுழைவித்தார் என்பதை மறக்க முடியாது. காரியாலயம் சென்ற பின்னரும் M.A, M.Phil, PHD என கல்வியில் உயர்ந்து விளங்கியதால் இன்று பல்கலைக் கழக விரிவுரையாளராகவும் தன்னை உயர்த்திக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**KM / MARUTHAMUNAI**
**SHAMS CENTRAL COLLEGE**
MARUTHAMUNAI - # 32314
Tel : +94 67 2229516 E.Mail : maruthamunaishamscc@yahoo.com

ASPIRE FOR GREATNESS

**Extract of assumption of duties : Mr. M.A.S. Mohamed Firthows**

I certify that the aforesaid teacher had engaged in teaching of A/L Tamil Language at this school continuously from 1994 to 1999 respectively and also the extract of the result he produced during that period is as folows :

G.C.E.(A/L) (Tamil)

| Year | Canditates | Passed | Ratio (pass%) |
|---|---|---|---|
| 1994 | 06 | 06 | 100 |
| 1995 | 15 | 15 | 100 |
| 1996 | 22 | 22 | 100 |
| 1997 | 15 | 15 | 100 |
| 1998 | 34 | 32 | 94.11 |
| 1999 | 25 | 25 | 100 |

PRINCIPAL

AL-HAJ. TL. MOHAMED AMEENUDEEN (SLPS-I)
BA, MA (Pera), Dip-in.Ed., Mgt (Merit) India
Dip-in.office Admin(Merit) SP.Td (Agri)
PRINCIPAL
KM/Maruthamunai Shams [illegible]

எங்கு சென்றாலும் அவரது மாணவர்கள் பலர் உயர் பதவிகளில் அரச அலுவலகங்களில் நிறைந்திருப்பது அவரது கற்பித்தலின் வெற்றியே என்றால் மிகையாகாது. 1990 ம் ஆண்டு தரம் 6 ற்கு ஷம்சிற்கு சென்ற காலம் இன்னமும் ஞாபகமிருக்கிறது எங்களுக்கு ஆங்கிலம் பெரும் சவாலாக இருந்த நேரம், அங்கிலப் பாடத்தை ஆரம்பத்திலிருந்து செயற்பாட்டு ரீதியாகக் கற்பித்து எங்களை வளப்படுத்தினார். எங்கள் பாடசாலையில் நடைபெற்ற எத்தகைய விழாவாக இருக்கட்டும் அதில் பிர்தௌஸ் ஆசிரியர் பிரதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திரம் வகிப்பார். அறிவிப்பாளராக, கலைஞராக, பேச்சாளராக, நல்ல வழிகாட்டியாக என அவரின் பங்கு மிகைத்துக் காணப்படும். ஏன் அவர் அணியும் உடைகள் கூட இன்னும் எனக்கு முன்மாதிரி யான தாகவே காணப்படுகிறது. தமிழ்ப் பாடம் கசந்து உயர் தரத்தில் அவ்வா றானதொரு பாடம் உண்டா? என எண்ணிய வேளை "இவனால் மீண்டும் இனிக்கிறது" எனும் வாசகத்தின் மூலம் எங்கள் அனைவருக்கும் தமிழை தேனாக இனிக்கச் செய்தார்.

இவரின் மாணவர்கள் தான் இன்று ஆரம்பநெறி இடைநிலை, உயர்தர மற்றும் தமிழ்பாட ஆசிரியர்களாக அம்பாறை மாவட்ட அனைத்துப் பாடசாலைகளிலும் நிறைந்து காணப்படுகின்றனர். நான் கட்டுரை சுருக்கம், கிரகித்தல் ஆகியவற்றில் சிறந்த தேர்ச்சி பெற வழிகாட்டிய ஆசிரியர் இவர். இதன் விளைவு 1998ம் ஆண்டு சுதந்திர கட்டுரைப் போட்டியில் அகில இலங்கையில் முதலாமிடம். 2016ம் ஆண்டு அதிபர் பரீட்சையில், SLEAS பரீட்சையில் சித்தி பெற்றமையை குறிப்பிடலாம்.

ஆசிரியர்கள் பிறக்கிறார்கள் என்பதற்கேற்றாற் போல் ஒரு ஆசிரியருக்கே உரிய அனைத்து திறன்களையும் கொண்டிருக்கும் கலாநிதி பிர்தௌஸ் அவர்களின் ஓய்வு கல்விச் சமூகத்திற்கு பேரிழப்பாகும். உண்மையாக கற்பித்து எங்கள் அனைவரது உள்ளங்களிலும் உயர்வாக வாழும் உங்களின் எதிர்கால வாழ்கை ஒளிபெற பிராத்திக்கின்றேன்.

என்றும் உங்கள்
அன்பான மாணவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரகக் கப்பல்

**சந்தக்கவி அச்சு முகம்மட்**
*சிரேஷ்ட ஆசிரியர்,*
*சம்மாந்துறை*

சத்தார் எம் பிர்தௌஸ் - தமிழ் சாகரம் போன்ற குரு
வித்துவம் சூழ்ந்த ஒரு - தேன் விரி மலர் பூத்த உரு
எத்தனை காவியத்தை - இரசம் எழுந்திட ஒப்புவித்தார்
மொத்தமாய் அவரிடத்தில் - கவி மோகனம் நிறைந்திருக்கும்.

காரைக்கால் அம்மையாரை - எம் கண்ணெதிர் வரவழைப்பார்
தாரையின் பாத்திரத்தை - விழி தாவிட நடித்திருப்பார்
நீரைச் சுமந்த விழி - இமை நிறுத்தாமல் இரசித்திருக்கும்
தேரையைப் போன்றிருந்தோம் - மதி தெளிந்திட வழி சமைத்தார்.

காந்தமாய் ஆன குரல் - செவி கவர்ந்திட பாட்டிசைப்பார்
சாந்தமாய் ஆன மனம் - நிறை சால்புகள் கொண்ட குணம்
பூந்தளிர் தோற்றுவிடும் - மென் புன்னகை பூத்த முகம்
நீந்திக் கரை ஏறுதற்கு - நிஜ நீரகக் கப்பலானார்.

கலையிரசம் கொண்டமைந்த தனிக் கலைத்துவம் வார்த்த உடல்
தலைக்கனம் தவித்து நின்ற - உரு தனித்துவச் செம்மல் அவர்
அலைக்கடல் துரும்பு போல - அன்று அலைகையில் தாங்கியவர்
இலைக்குள்ளே மறைத்திருந்தோம் - எமை
இலக்கியம் ஆக்கி வைத்தார்.

முத்தமிழ் குவிந்திருக்கும் - மருதமுனை மண் ஈன்ற ஆசான்
நிலத்திலம் பூத்த சுடர் - தமிழ் நிரம்பிய மூத்த கடல்
சித்திரம் போற் குடும்பம் - மிடி சீக்குகள் போக்கி நின்று
இத்தால் நீண்டு வாழ - ஏக
இறைவனை வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பேராசிரியர்
கலாநிதி
சபா. ஜெயராசா



கல்வியியலில் நிகழ்ந்துவரும் புதிய மாற்றங்களையும், அவற்றின் பரிமாணங்களையும், அவற்றை முகாமை செய்தலையும், தொடர் மேம்பாட்டு இலக்குகளை நோக்கி நகர்ந்து விசைப்படுத்தலையும், தெளிந்த இலக்குகளாகக் கொண்டு சத்தார் எம். பிர்தௌஸ் அவர்களின் "நிலைமாற்று முகவர்" என்ற நூல் ஆக்கம் பெற்றுள்ளது.

கல்வியியலில் நிகழ்ந்து வரும் கருத்துவினைப்பாடுகள் (Discourses) பல்வேறு புறக்கணிப்பு, எல்லைப்படுத்தி ஓரங்கட்டுதல், வாண்மைத் தளம்பல், வினைத் திறன் வீழ்ச்சி, தரவீழ்ச்சி, முதலாம் எதிர்மறையான பரிமாணங்களைத் தீவிரமான பரிசீலனைகளுக்கு உட்படுத்தி வருகின்றன. அந்நிலையில் பயனுள்ள நூலாக்கங்கள் காலத்தின் தேவையாக மேலெழுகின்றன. இவ்வகை யிலே பயனுள்ள ஒரு நூலாக்கத்தை இந்நூலாசிரியர் புதுவரவாக்கியுள்ளார்.

நிலைமாற்றம் என்பது நிலையுயர்த்தலாக (Transliftment) உயர்ச்சி பெறுவதற் குரிய அறிகைத் தளத்தை வளம்படுத்தும் முயற்சியாக இந்நூலாக்கம் இடம் பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் தொடர்பான நடப்பியல் நிலவரங்களின் உற்று நோக்கலோடு ஆரம்பிக்கும் இந்நூல் சமகாலக் கலைத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடைமுறைகளையும் அணுகுமுறைகளையும் வரன்முறைப் படுத்தித் தந்துள்ளது. உயர்நிலையான ஆய்வுமுயற்சியில் ஈடுபட்டுள்ள தமது அனுபவத்தை இந்நூலாக்க ஒழுங்கமைப்பில் ஆசிரியர் பிரயோகித் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐந்தெழுமாதிரிகை பற்றிய தெளிவான விளக்கமும், அதனோடி ணைந்த குணநல உள்ளீட்டு நுட்பங்களும், செயற்பாட்டு மாதிரி வடிவமைப்பும் தரவு நிரற்படுத்தலும், பாடசாலை மட்டக் கணிப்பீட்டுக் கருவிகளும், தேர்ச்சிகளை முன்னெடுத்தலும் என்றவாறு நூலாக்கம் வளர்ந்து செல்கின்றது.

ஆசிரியர் "உறுவளம் செய்பவர்" (Fecilitator) என்ற நிலையில் மேற்கொள்ள வேண்டிய பணிக்கூறுகளும் அவற்றின் பரிமாணங் களும் எவ்வாறு அனைத்தையும் உள்ளடக்கிய வகையிலே தரப்பட்டுள்ளன. புதிதாக ஆக்கம் பெற்ற கல்வி அபிவிருத்திக் குழுவிலிருந்து கல்வி நுட்பவியல் வரை பல்வேறு கருப்பொருள்களைத் திரட்டித்தரும் நூலாக்க மாக இது அமையப் பெற்றுள்ளது.

அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு கைந்நூலாகவும், உசாத்துணை ஏடாகவும், ஆசிரியர்களுக்கும், கல்வியை முகாமை செய்வோர்க்கும் பயன்படும் வண்ணம் எழுத்தாக்கத்தைத் திட்டமிட்டுள்ள நூலாசிரியர் பாராட்டுக்குரியவர். கலைத் திட்டத்தையும் கல்வி முகாமைத்துவத்தையும் உரியநிலையில் அறிக்கைப்படுத்தும் முயற்சி நூலிற் செப்பனிடப்பட்டுள்ளது.

கோயில் முன்றல்,
இணுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## கலாநிதி பிர்தௌஸ் சத்தாரின் "கிழக்கிலங்கை தமிழ் நாவல்கள் சமூக, அரசியல் நோக்கு" பார்வையும் பார்வை ஊறிக் கடத்தலும்

ஏ.எம். குர்ஷித்
அல்-பஹ்றியா தே.பா.

நாவல் வரலாற்றின் தொடக்கம் தமிழ் நாட்டினைச் சுற்றியதாகவே பேசத் தலைப்படுகின்றன. அது எல்லை உடைத்து விஸ்தரித்துக் கொள்ளவில்லை. இலங்கை தேசத்தில் முளைப்பெடுத்த இலக்கியக் கூறுகள் கதைப்பாரற்று சோம்பிக்கிடந்தன. இடையிடையே தலைக் காட்டிய வைகளும் நாவல்களின் உட்கூறுகளின் வழிநுழைந்து பார்க்காமல் பொத்தாம் பொதுவாக பேசிக் கடந்து விடுவதாகவே இருந்தன.

பிரதேசம், பிரதேச வழமை, கலாசாரம், கலாசார உப பிரிவுகள், மதம், மதத்தின் கொள்கை, வழிப்பிளப்புகள் என பிரதேச வழமையாக காணக்கூடிய விடயங் களை பேசிய நாவல்கள் பற்றிய தொன்மங்களையும் தொன்மை வழி நகர்ந்து நவீனம் வரை வந்து சேர்ந்த ஒரு தொகை நூல்கள் பற்றிய செய்திகள் தேக்க முற்று கிடந்த இக்காலை அவற்றை பிரகாசிக்கச் செய்யத்தக்கதாக முக் காலாசாரங் களையும் தன்னுள் பொத்தி வைத்திருக்கின்ற கிழக்கிலங்கையில் இருந்து வெளிவந்த நாவல்களையும் அதன் பின்புலங்களையும் சாட்சிய வழி நிரூபண மாக உரத்துப் பேசும் விதமாக கலாநிதி பிர்தௌஸ் சத்தாரின் 'கிழக்கிலங்கை தமிழ் நாவல்கள் சமூக, அரசியல் நோக்கு' என்ற நூல் வெளிவந்திருக்கிறது.

இது ஆய்வின் நிமித்தம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் மேம்பட்ட வடிவம் என்பதனால் சட்டக வழமையொன்றை உருவாக்கி அதன்வழி இயங்கு கின்றது. வழமையான ஆய்வுகளில் வரும் பாய்ச்சல் பண்புகளை தவிர்த்து ஆங்காங்கே சான்றுகளின் வழி நிறுவியபடி ஒரு நேர்கோட்டு ஒழுங்கில் பயணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் ஆறு பெரும் பரப்பை சொல்லிச் செல்கிறது.

1) அறிமுகம்
2) 1950 - 1980 வரையான காலகட்டத்தில் தோன்றிய நாவல்கள்
3) 1980 களில் எழுந்த நாவல்கள்
4) 1990 களில் எழுந்த நாவல்கள்
5) 2000 - 2010 காலப் பகுதியில் எழுந்த நாவல்கள்
6) கிழக்கிலங்கை தமிழ் நாவல்களும் மொழிநடையும்

இனி இவ் ஆறு இயல்களின் மீதும் பார்வையைப் படுத்துவோம். ஆறு இயல்களையும் அக்கறையோடு தாண்டல்.

**(1)**

கலாநிதி பிரதௌஸ் தனது அறிமுகத்தில் சொல்வதைப் பார்க்கும்போது நூற்றாண்டு கடந்த நாவல் வளர்ச்சியில் கிழக்கிலங்கை நாவல்கள் கவனக் குவிப்பு பெறாமல் வெறுமனே உதிரிகளாயும் விமர்சன குறிப்புகளாயும் நினைவு மலர்களில் எட்டிப்பார்க்கும் கட்டுரைகளாயும் பொட்டுபொட்டாய் பூத்தவற்றின் போதாமையின் ஆதங்கம்தான் இந்நூலுக்கான அடிப்படையாக அமைந்துவிடுவதாக கொள்ள இயலும். பிரதேச நாவல்களின் சேகரங்களை உள் அனுமதித்து அவற்றின் முக்கியத்துவம் குறைந்துவிடாது காலகட்ட வரிசையொன்றை ஏற்புடையதாக்கி ஆசிரியர் இந்நூலை விரித்துச் செல்கிறார். கிழக்கில் எழுதப்பட்டிருந்த 131 நாவல்களில் 40 நாவல்களே பேசப்பட்டிருக்கின்ற ஆற்றாமையை கலாநிதி பிரதௌஸின் இந்த நூல் தீர்க்கிறது. 1891 காலங்களிலிருந்து 2010க்கு மிக அண்மித்ததான காலங்களில் கவனிக்க மறந்த நூல்கள் பலவற்றை இந்நூல் மனங்கொள்கிறது. கிழக்கிலங்கையின் ஈறுவரை அலைந்து 62 படைப்பாளி களின் 131 நாவல்களை தேடியறிந்து அவற்றின் உட்கிடைகளின் பார்வை யூன்றியிருப்பது இந்நூலின் பிரதான சிறப்பு.

நூலாசிரியர் கிழக்கிலங்கையில் கண்டறிந்த நாவல்களை அதன் வகைமைப் பண்பு வழி மாறாது சமூகம், பெண்ணியம், தலித்தியம், வட்டாரம், குடும்பம், உளவியல், ஆன்மீகம், புதுமை, மர்மம், பின் நவீனத்துவம் என்ற உள்ளடக் கங்களில் நாவல்களை பேச விளைந்திருப்பது வாசிப்பாளனின் கவனக் குவிவுப் புள்ளியை சிதறவிடாது தற்காத்துக்கொள்ள போதுமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் ஆய்வு நூலின் முதல் ஐந்து இதழ்களும் கிழக்கிலங்கையினதும் ஈழத்தினதும் சமூக அரசியல் ஒழுங்கினை பேசுவதையே முன்னிலைப்படுத் துகிறது. வெறும் புனைவுகளாயும் கற்பனை ஊறிப் பருத்ததாயும் கிடந்த கிழக்கு நாவல்கள் 1950 களின் பிறகு சமூக அரசியல் பின்னணியில் பேரினவாத மேலாதிக்கத்தின் மீதான உதைப்புகளைச் செய்யும் விதமான பிரசாரத் தொனியிலும் கலகக்குரலாயும் உருமாறியதாக ஆசிரியர் தன் அறிமுகத்தில் சொல்லிச் செல்கிறார். 1980களில் முளைப்பெடுத்திருந்த இன முரண்பாடு, சாத்வீகத்தின் வழி நகர்ச்சியில் நம்பிக்கையிழக்க செய்தபோது ஆயுத வழி உருமாற்றத்தினூடாக தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட வாழ்நிலை அனுபவங்களை பேசுவதாக 80களில் வந்த நூல்கள் உள்ளதாக பிரதௌஸ் சொல்லிக் காட்டுகிறார்.

தமிழ் தேசியப் போராட்டமானது நேரடிப் போர்க் கோலத்தை ஏற்றமை, வெளிநாட்டுச் சக்திகளின் பரவுகை, சமூக இடப்பெயர்வு, புலப்பெயர்வு, அகதி முகாம் வாழ்வு போன்றன 1990களின் இலக்கியப் புலத்தை வேறொரு திசைக்கு தள்ளிவிட்டதாக ஆசிரியர் கடும் தொனியில் சொல்கிறார்.

சமாதன உடன்படிக்கைகளின் கையறு நிலை நான்காம் கட்ட ஈழப்போரை தோற்றுவித்தது. அதன் வழிநோதலும், நவீன வாசிப்பின் விரிந்த புளக்கமும் 2000ம் காலத்தேய சூழலை அதிகம் பிரதிபலிப்பதாக அமைந்துள்ள சங்கதியை கலாநிதி பிர்தௌஸ் தன் அறிமுக இயலில் உரைக்கிறார்.

தொடர்ந்து பிர்தௌஸ் போர்த்துக்கீஸர் காலம் தொட்டு 1980 வரையான அரசியல் அழுத்தங்கள் ஈழ இலக்கியத்தில் செலுத்திய தாக்கங்கள் பற்றி பேச விளைகிறார். 1931 இன் டொனமூர் அரசியல் யாப்பின் வழிபிறந்த வாக்குரிமை, 1958 இல் சிறிமாவின் 'சிறி' ஆதரவால் விளைந்த எதிர்நிலை, 70களில் விளைந்த சோஷலிசச் செல்வாக்கு, 72 களில் தலையெடுத்த மொழி, மதம் என்பவற்றின் பாகுபாடு 77 களில் திறந்த பொருளாதாரத்தின் வருகை போன்ற அரசியல் காரணங்கள் நாவல்களின் பின்புல இயக்கத்திலும் மாற்றத் திலும் அதிகாரம் செலுத்திய வகைமையை ஆசிரியர் எழுதிச்செல்கிறார். தொடர்ந்து இலக்கியங்களும் அதன் வளர்ச்சியும், பத்திரிகைகளின இலக்கியத் தொண்டு, இலக்கிய சஞ்சிகை களின் பணி, கையெழுத்துப் பிரதிகளின் வருகை என கிழக்கிலங்கையின் நாவல் வளர்ச்சிக்கு உதவிய உபரிகளை ஒன்றான்றாய் ஆதார வகைமைகளோடு சொல்லிக் கடக்கும் ஆய்வாளர் கிழக்கிலங்கையில் அடையாளம் கண்ட முதல் மூன்று நாவல்களான ஊசோன் பாலந்தை கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1891), மோகனாங்கி (1895), அரங்க நாயகி (1934) என்பவற்றின் சரிதங்களை யும் அதன் பொதிவுகளையும் விவரிக்கிறார். மூன்றும் நாவல்களிலும் தொடக்க கால பண்புகளான வீர சாகசம், வரலாறு, மர்மம் முதலான பண்புகளே தை நீட்டுவதாக கண்ட கலாநிதி பிர்தௌஸ் விழுமியத் தொனியை முன் நிறுத்து கின்ற இந்நாவல்களுள் மோகனாங்கியில் மாத்திரம் ஈழத்து பேச்சு வழக்கை காணக் கிடைக்கிறது என்ற அரிய வகை உண்மையைச் சொல்கிறார்.

(2)

அடுத்தாற் போல் 1950 - 1980 வரைக்குமானநாவல்கள் பற்றி அக்கறைப் படுகின்ற பிர்தௌஸ் 'தனி மனிதருக்குள்ளும், தனி மனித சமுதாயத்திற் குள்ளும் நிகழும் பிரச்சினைகளை கதைப் பொருளாகக் கொண்டு அவற்றி னையும் அக் கால அரசியலினையும் விமர்சனம் செய்யும் வகையில் 1950 தொடக்கம் 1980 வரைக்கும் உள்ள காலப்பகுதியில் பல்வேறு தரத்திலுள்ள இருபத்தைந்து நாவல்கள் கிழக்கிலங்கையில் வெளிவந்திருக்கின்றன' என்கிறார். வெளிவந்துள்ள நாவல்களின் பெயர் விபரங்களை கால ஒழுங்கில் பட்டியல்படுத்தி செல்கின்ற ஆயுனர் அந்நாவல்களை சமூக உணர்வு நாவல்கள், வரலாற்று நாவல்கள், மர்ம நாவல்கள், தேசிய ஒருமைப்பாட்டு நாவல், அரசியல் நாவல் என ஐந்தாக கூறு செய்து அதுபற்றி விலாவாரியாக சான்றுகள் சகிதம் உண்மைப்படுத்தி பேசுகிறார்.

சமுக நாவல்களை எதார்த்தம் அல்லது நடப்பியல் மற்றும் போலி எதார்த்த வாதம் என்ற இரு பண்புகளை மையப்படுத்தி காட்ட விளைகிற பிர்தௌஸ் அந்நாவல் களில் துருத்தி நிற்கிற காதல், தியாகம், கடமை பற்றி கூறுவதோடு உட்குடைச் சலை செய்கின்ற உளவியல் தன்னுணர்வான பாலியல் பற்றியும் அக்காலத்தில் மேலெழுந்த வர்க்க முரண்பாடு களையும் அடையாளம் காட்டும் நாவல்களை யும் எடுத்து வைக்கிறார்.

சாதாரண இயற்கை நிகழ்ச்சிகளை சித்தரிக்கும் நாவல்கள் இயற்கை சரித்திர நவினம், அற்புத சரித்திர நவீனம் என்ற பேராசிரியர் கைலாசபதியின் கூற்றை உள்வாங்கி கிழக்கிலங்கையின் வரலாற்று நாவல்களை விரித்துச் செல்லும் நூலாக்குனர் மர்ம நாவல்களை சூது சதி வஞ்சகம் என்ற உள்ளடக்க வாயிலாக சொல்லி நிற்கிறார். தேசிய ஒருமைப்பாட்டை உரத்துச் சொல்லும் நூல்கள் அடைகாத்து பத்திரப் படுத்தும் தமிழ் - சிங்களவர் உறவு ஆசிரியர் மூலம் வெளிச்சத்துக்கு வருவது இவ் ஆய்வு நூலின் கால பொருத்தம் கருதிய சிறப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வர்க்கத்தற்குள் மூடுண்டிருக்கும் அரசியற் கருத்துக்களையும் சித்தாந்தங் களையும் ஒப்புவிக்கிற அரசியல் நாவல்களையும் இந்நூல் அலசிப் பார்க்கிறது. கல்வி, வேலை வாய்ப்பு, சாதி, பெண் நிலை, தியாகம், குண பேதங்கள், வெளிநாட்டுப் பயணங்கள், விதவைகளின் நிலை, சீதனம், மத நம்பிக்கை வழக்காறுகள் போன்ற சமூக நிலைகள் போன்றவற்றை 1950 - 1980 வரையுள்ள காலத்தைய நாவல்களை நிர்ணயித்த விதத்தை சுட்டிக்காட்டிய பிர்தௌஸ் அதனோடு இணைந்து அக் காலத்தைய அரசியல் நிலமை நாவல்களில் வெளிப்படும் விதத்தையும் அதிகார மேலாதிக்கம், விவசாய ஊக்குவிப்பு, குடும்பக் கட்டுப்பாடு, வகுப்பு வாதம் என்ற தலைப்புகளில் பேசி இரண்டாம் அத்தியாயத்தை முடித்துக் கொள்கிறார்.

(3)

மூன்றாவது இயலில் இவ்வாய்வு நூல் 1980 களில் எழுந்த நாவல்கள் பற்றி பேசுகின்றது. 'கிழக்கில் எண்பதுகளில் வெளியான நாவல்களை பார்க்கையில் அரசியல் விவகாரங்களை மாத்திரமன்றி, சமூக வாழ்வியல் அனுபவங்களும் அதிகம் இணைந்து வந்துள்ளதை காணலாம். இப் பிரதேசத்தின் அரசில் நெருக்கடிகள், கல்வி வளர்ச்சி, சமூக எழுச்சி என்பவற்றால் நாவல் இலக்கிய சொல் நெறியை முன்னரை விட சற்று மாறுதல் தருகின்றன' என்று எழுதுகிற ஆய்வாளர் ஜூலை கலவரமும் அதனைத் தொடர்ந்து வந்த விடுதலை இயக்கங் களின் தொடக்க காலங்களில் நடைபெற்ற சம்பவங்கள், அரச இராணுவ கெடு பிடிகள், இடப்பெயர்வுகள் சார்ந்த முறைமை நாவல்களில் தாக்கம் செலுத்தும் விதத்தை நூலாசியர் காட்டுகிறார். நூல் தருனர் 1980 களில் வந்த நூல்களை சமூக உணர்வு நாவல்கள் என முதலாவது வகுதியிடும் போது அதன் உள்ளடங் கலாக எழுதப்பட்ட நாவல்களின் மையப்புள்ளியிலிருந்து பொருளாதாரப் பிரச்சினை, கல்வி, கூட்டுறவு இலட்சியம், பெண்கள் பற்றிய பிரச்சினைகள், அந்தஸ்த்து பிரச்சினை, சீதனப் பிரச்சினைகள், விதவை மறுமணம், பொதுப் பணிக்கான வாழ்க்கை என்ற கிளைத்தல்களை உண்டு பண்ணுகிறார். வரலாற்று நாவல்களோடு அசைந்த எழுதுனர் கோணேசர் கோயில் வரலாறு, மட்டகளப்பு சமுகவரலாறு என்ற விடயங்களை உள்ளேற்ற நாவல்களை காணகிறார். இதனைத் தாண்டி எண்பதுகளில் காணப்பட்ட அரச நாவல்களை யும் மொழி பெயர்ப்பு நாவல்களினதும் வரிசைகளை நூலாசிரியர் கண்டு சொல்கிறார். அகதி அந்தஸ்தது கோரியவர்கள், அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட வர்கள், வதிவுடமை பெற்ற அகதிகள், வேலைச் சான்றிதழ் பெற்ற வெளி நாட்டவர்கள், குடியுரிமை பெற்றவர்கள், பிரஜாவுரிமை பெற்றவர்கள் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவகுமாரனால் பிரேரிடப்பட்ட புலம்பெயர்ந்தவர்களின் வகைமையால் எழுதப்பட்ட நாவல்களின் வகைமையை கலாநிதி பிர்தௌஸ் முதன்மையிட்டு காட்டுகிறார். அதற்க பிற்பாடாக 1980 களில் வந்த நாவல்களின் சமுக பேச வந்த ஆயுனர் கல்வி. வேலை வாய்ப்பு. சாதி அமைப்பு. பெண்நிலை. ஆணாதிக்கம். கட்டாயத் திருமணம் விதவை அவலங்கள், வழக்காறுகள், நம்பிக்கைகள் போன்றவற்றினூடாக நாவல்கள் விளைந்ததாய் கூறுகிறார். சுதந்திரத்திற்கு பின்னதான அரசியல் நிலை. குடியேற்ற திட்டங்கள் அல்லது திட்டமிட்ட குடியேற்றங்கள். இராணுவச் சுற்றிவளைப்புகளும் அதன் வழி அதிர்வும், கட்சி உற்பத்தியும் பெருக்கமும், அதன் வழி அரசியலும் என எண்பதுகளின் அரசியல் வழமையை இவ் ஆய்வு நூல் விவரிக்கிறது.

**(4)**

நான்காம் இயல் 1990களில் வந்த நாவல்களை பற்றிய செய்திகளாய் அமைகின்றன. பிரேமதாச, சந்திரிக்கா என்பவர்களின் ஆட்சிப் புலத்தில் வெளிநாட்டுக் கொள்கை, பொருளாதாரம், சமாதான நகர்வுகள், யுத்த சூழ்நிலை என்பவற்றை விவரிக்கும் இந்நூல் அப்பின்புலத்தில் உதித்த நூல்கள் பற்றியும் பேசுகின்றது. பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் கிழக்கின் மூன்று மாவட்டங் களிருந்தும் இலக்கியத்துக்கு ஆற்றிய பணிகளையும் காலத்துக் காலம் தோற்றம் பெற்ற இலக்கிய விழாக்கள் மூலம் நாவல் எழுதுனர்கள் கௌரவிக்கப்பட்ட தையும் முற் குறிப்பாக கொண்டு எழுதப்பட்ட அவ்இயல் 1990களல் வெளிவந்த நாவல் களையும் அவற்றின் வகைகளையும் சமுக உணர்வு நாவல்கள் என்ற தலைப்பில் கிராமிய எழுச்சி. பற்றியவை. மீனவர் வாழ்வு பற்றியவை. காதல், தியாகம், நட்பு பற்றியவை என ஒரு பக்கம் விவரித்துக் கொண்டு மறுபக்கம் தேசிய உணர்வு நாவல்களில் தமிழர், இஸ்லாமியர். சிங்களவர். கிறிஸ்தவர் எனப்படுவோரின் உறவுப் பிடிமானங்களை எவ்வாறு நாவல்கள் உள்ளடக்க மாக்கியுள்ளன என்பதை சொல்கிறது. மனிதநேய யுத்தங்களும் வர்க்க போராட்டங்களும் வன்முறைக் கலாச்சாரங்களும் எவ்வாறு 1990களின் நாவல் இலக்கியத்தில் செல்வாக்கு செலுத்தி என்பதை சொல்லும் இவ்ஆய்வுப் பிரதி புலம்பெயர் ஆண் பெண் உறவு. நிலைகள் இளைஞர் யுவதி பிரச்சினை கள், சூழல் வழி அடையாளப்படுத்தப்படும் ஆண் பெண் உறவு நிலைகள், இளைஞர் யுவதி பிரச்சினைகள், குடும்பச் சிதைவுகள் போன்றவற்றை மையப்படுத்தி கிழக்கின் புலத்திலிருந்து புலம் பெயர்ந்தவர்களின் நாவல்களை பேசுகின்றன. கல்வி சாதி சூழலியல் போன்றவற்றின் 1990களின் சமுக நிலமையினை பேசுகின்ற இவ்ஆய்வு மதங்களின் உட்கூறுகளின நிலவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமையின் மீது கேள்வி எழுப்புகின்ற நாவல்களையும் அடையாளப்படுத்தி கடக்கிறது. 1990களில் வெளிவந்த அரசியல் நாவல்களின் மையப்புலம் ஆயுதப் போராட்ட இயக்கங்களும் அவற்றின் வளர்ச்சியும் இயக்கங்களிடையே ஏற்பட்ட மோதல்களையும் அரசபடைகளுக்கும் இயக்கங்களுக்குமிடையிலான மோதல்களையும் மோதல்களின் பின்னரான இராணுவ சுற்றி வளைப்புகளை யும் காட்டு வதோடு அதனையொட்டிய நாவல்கள் அவ்வேளையில் பிறந்ததாக வும் இந்நூலில் காட்டப்படுகிறது.

(5)

ஐந்தாவது இயல் 2000 - 2010 வரையான காலப் பகுதியில் காணக் கிடைக்கிற நூல்களைப் பற்றிய சங்கதிகளின் வெளிப்பாடாக காணப்படு கிறது. இப்பகுதியில் ஆய்வாளர் கிழக்கிலங்கையில் நூல் வடிவில் வெளி வந்த 47 நாவல்களையும் சஞ்சிகைகளில் வெளி வந்த இரு நாவல் களையும் சமுக உணர்வு நாவல்கள், வரலாற்று நாவல்கள் போர்ச் சூழல் பற்றிய நாவல்கள், புலம்பெயர் நாவல்கள், சிறுவர் புனைவு நாவல்கள் என வகைமை செய்து அன் உட்கூறுகளில் தன்னை மேய விடுகிறார். 2000ங்களில் நாவல்களின் எழுகையின் அதிகாரங்களில் செல்வாக்கு செலுத்திய பின்புலக் காரணிகளான சமுக அரசியற் போக்குகள், சமாதானப் பேச்சும் வெளியுறவுக் கொள்கையும், உள்ளக அரசியல் இழுபறி, பொங்கு தமிழ் நிகழ்வுகள், மகிந்த சிந்தனை அது சார்ந்த வெளிநாட்டுக் கொள்கை நான்காம் ஈழப்போர், போருக்கு பின்னரான நிலைப்பாடு என்பவற்றை விரிந்த தளத்தில் பேசுகிறார். இணையத் தளப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இலக்கிய இயக்கங்களும் இலக்கிய பெருவிழாக்களும் இக்காலத்தைய நாவல்களிலும் இலக்கிய அசைவுகளிலும் தாக்கம் புரிந்த விதத்தை பேசிய ஆசிரியர் சமுகம் சார்ந்து பிரதி பலிக்கும் அன்பு வழிநின்ற இலக்கியங்களும் போரும் அதன் வடுவும் அது ஏற்படுத்திய பின்னணிக் தாக்கங்களும் அதன் வழி அலைக்கழியும் வாழ்வும் பற்றி உரைக்கின்ற நாவலின் பண்புகளையும் சிறுசிறு தலைப்புகளிலாக்குகிறார்.

இந்த இயலின் பிரதான சிறப்பு ஈழ இலக்கியங்களில் போதிய கவனிப்பு பெற்றுக் கொள்ள மறுக்கப்பட்ட நூல்களை பற்றி பேசப்படுவதுதான் அந்த வகையில் அ.அ. ஜெயராசாவின் சேகுவரா.போரும் மனிதனும், அப்பர் கோவிந்தனின் புதியதோர் உலகம் எஸ். நசிறுத்தீனின் நச்சு வளையம், விமல் குழந்தை வேலின் வெள்ளாவி. ஜுனைதா ஷெரீபின் சின்ன மரைக்கார் பெரிய மரைக்கார். திசேராவின் விடுபட்ட கொலையாளி. ஆர்.எம். நௌசாத்தின் நட்டுமை, உமா வரதராஜனின் மூன்றாம் சிலுவை போன்றவற்றை குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6)

கடைசி ஆறாம் அத்தியாயம் என்னுள் மிகப் பிரதானப்படுவதாக கருதுகிறேன். இந்த ஆய்வுப்புத்தகம் கிழக்கிலங்கை நாவல்களின் உள்ளடுக்குகளில் கதை மாந்தர்கள் உரையாடிக் கொள்ளும் மொழி வழமைகளை ஆய முற்படுகிறது. பிரதேசத்தையும் பிரதேச அச்சு அசல் பண்பாட்டு விழுமியங்களையும், நடை முறை இயங்கியல்களையும், அவர்கள் கடத்திக்கொள்கிற தர்ம அதர்மங் களையும், அவர்களுடைய குணத்தின் வன்மை மென்மைகளையும் அறிய உரையாடல்களே ஆதாரமாகின்றன. கிழக்கு நாவல்களின் மொழிநடை பொருத்தப்பாட்டின் அடிப்படையில் இவை நான்கு வகையாக புத்தகம் சொல்கிறது.

1) கதை மாந்தர் உரயாடல்கள்
2) சொற்கள்,சொற்றாடர்கள்
3) சம்பவ விபரிப்புகளும் வர்ணனைகளும்
4) கதை நகர்த்தும்முறைகள் என்பதுவே அவை.

உரையாடல்கள் சமூக நாவல்களிலும் துப்பறியும் நாவல்களிலும் ஊடாடும் வகைமையை எடுத்து வைக்கும் பிரதியாளர் அவ் உரையாடல்களில் வெளிப்படும் எதார்த்த, புனைவு மொழிகளை ஆதாரங்களின் வழி நிறுவிச் செல்கிறார். நாவல்களில் உரையாடல் இன்றியமையாத என்பதை உணர்ந்து பேசிய ஆசிரியர் தெடர்ந்ததாக பேச்சு வழக்குச் சொற்களை நாவல்களிலிருந்து கோர்த்தெடுத்த அவர் மூன்று மாவட்டங்களிலும் நிலவும் பேச்சு வழக்கை நாவல்கள் அவற்றின் பக்கங்கள், சொற்கள் என வித்தியாசப்படுத்தி காட்டுவது சிறப்புக்குரியது. சொற்றொடர்களில் வழி நாவல்களில் புளங்குகின்ற இரட்டைக் கிளவி, மரபுத் தொடர்கள்,உவமைத் தொடர்கள்,உருவகத் தொடர்கள், அடுக்குத் தொடர்கள், பழமொழித் தொடர்கள் என தேடித் தொகுத்திருப்பது ஆய்வாளரின் நேர்த்தியான உழைப்புக்குச் சான்று.சம்பவ விபரிப்புக்களும் வருணனைகளும் இப் பிரதியில் எடுத்துக் காட்டப்படுமாற்றை தெளிவுபடுத்தும் ஆசிரியர் கதை நகர்த்தப்படும் முறைகளை கூர்ந்து பார்த்து அவைகளை ஆசிரியரே கதைகூறிச் செல்லல், பின்னோக்கு உத்திப்பயன்பாடு, நனவோட்ட முறை, குறுகிய காலத்துக்குள் கதைகூறல், கடித நாட்குறிப்பு முறையில் கதை கூறல், கிளைக்கதைகளை பயன்படுத்தல், வாய்மொழிப் பாடல்களை பயன் படுத்தி கதை கூறல், விவரணமும் குறியீட்டு பாங்கும், நவீன கதை கூறல் என பிளந்து நிற்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்புத்தகம் சார்ந்த பொதுப்பார்வை

1) இந்நூல் பத்து தசாப்த கால கிழக்கிலங்கையின் நாவல்களை அக் காலத்தைய நில, அரசியல், சமுக கட்டமைப்புகளின் பின்புல அசைவியக் கங்களுடே காட்சிப்படுத்துகிறது.

2) புத்தக நிறுவுனர் தன் கருத்தை நேர்த் தன்மையின் நிரூபணத் துக்காக பல் வேறு அறிஞர்களின் கருத்துக்களை பொருத்தமான இடங்களில் பொருத்தியுள்ளார்.

3) அனேகமான நூல்களிலிருந்து சான்றுகள் காட்சிப்படுத்தப்பட்டு அவற்றின் வழி கருத்தாடல் நிகழ்ந்திருக்கிறது

4) ஏற்றம் - தாழ்வு, பிரபல்யம் - பிரபல்யமின்மை, பேசப்பட்டது - பேசப் படாதவைகள், பிடித்தமானது - பிடிக்காதவை என்ற பாகுபாட்டினை தன்னுள் ஏற்றிக்கொள்ளாமல் புத்தக ஆசிரியர் தேடி அடைந்த அத்தனை கிழக்கு நாவல்களையும் பேச விளைந்திருக்கிறார்.

5) கலாச்சாரங்களினதும் சமுகங்களினதும் நம்பிக்கை வழமை களிலும் உள்ள மாறுபாட்டையும் எதிர் கதையாடல்களையும் இந்நூல் காட்டி நிற்கிறது.

6) கருப்பொருள் முகிழ்க்கும் எல்லை, அது விரியும் தளம், கதைப் பாய்ச்சலும் திசைமாறி நகரும் விதமும் இந்நூலில் சுட்டிக் காட்டப்படுகிறது.


7) பாத்திரங்களின் உரையாடல் வழி வ்வக் காலங்களும் சமுக அறங்களும், உணர்வுகளும், ஒடுக்கங்களும், ஒடுக்கத்திலிருந்து கிளர்தெழும் வீரியங் களும் காட்சிப்படுத்தப்படுகிறது.

8) கிழக்கிலங்கை நாவல்களில் பெண்களின் எழுத்துப் பராம் பரியத்தையும் அதன் அசலான அவர்களின் வாழ்வியல் நெருக்கு வாரங்களையும் சுரண்டல்களையும் நூதன ஒடுக்கங்களையும் அவற்றிலிருந்து அவர்களின் மேலெழுகையும் இந்நூலின் வாயிலாக கலாநிதி பிர்தெளஸ் வெளிக் கொணர்கிறார்.

9) பிர்தெளஸ்.நீண்ட பயணத்தின் வழியாகவும் உழைப்பின் வழியாகவும் தான் கண்டடைந்த கிழக்கிலங்கையின் நூல்களின் அட்டைப் படங்களை பிற்பகுதியில் காட்சிப்படுத்தியிருப்பது இந்நூலின் விஷேட சிறப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






ஜெஸ்மி எம். மூஸா

கலாநிதி சத்தார் எம்.பிர்தௌஸ் பன்முக ஆளுமையின் விம்பம். நடனம், பேச்சு, அறிவிப்பு, விமர்சனம், ஆய்வு என்பதற்கு அப்பால் நல்லதொரு தேடலாளராகவும் அவர் தம்மை அடையாளப்படுத்தியுள்ளார். அவ்வாறனதொரு முயற்சியின் பிரதிபீடே "கசடற" என்ற நூலாகும்.

கிழக்கு மாகாண முதல் முஸ்லிம் ஆசிரியர் ஆ.மு. சரிபுத்தீன் அடங்கலாக கல்முனை வலயத்திற்குட்பட்ட 155 கல்வியியலாளர்களை வெளிக் கொணர்ந்த "கசடற" நூல் முயற்சி சத்தார் எம். பிர்தௌஸின் சிறந்த தேடல் வெளிப்பாட்டுக் கான ஆதாரமாகும். கவிஞர், மர்ஹூம் ஏ.ஆர். நிஃமத்துல்லாவுடன் இணைந் தான இம்முயற்சியில் வெற்றி அவர் கண்டுள்ளார். கல்விப்பணிப்பாளர்களாக, ஆசிரியர்களாகப் பணிபுரிந்த ஒவ்வொருவரினதும் புகைப்படத்துடன் அவர்கள் தொடர்பான சேவைக்காலத் திரட்டுக்களை ஒருமைப்படுத்தியுள்ள இந்நூலானது நுண்ணாய்வுத் துறையின் முக்கிய தேடலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ.நிஸாம், "கசுடற" விழாவின் பிரதம அதிதி வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சர் பேரியல் இஸ்மாயில் அஷ்ரஃப், கிழக்கு மாகாண ஆளுநர் மொகான் விஜிவிக்ரம, கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன், கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் விமலவீர திசாநாயக்க, கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் கே.கே.யூ.கே. வீரவர்த்தன, கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். தண்டாயுதபாணி, கல்முனை வலய மேலதிக கல்விப் பணிப்பாளர் எஸ்.கே. ஆனந்தராஜா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.அப்துல் ஜலீல், சேனைக்குடியிருப்பு கணேசா மகா வித்தியாலய அதிபர் கே. சந்திரலிங்கம் ஆகியோரின் உரைத்தல் பக்கங்களுடன் நூல் வலிமை பெற்றிருப்பது கவனத்திற்குரியதாகும்.

தனியொருவரது தகவல்களை வெளிக்கொணர்வதிலுள்ள சங்கடங்களே பெரிதான தேடல் தொடரியில் கலாநிதி சத்தார் எம்.பிர்தௌஸின் இம்முயற்சி பாராட்டுக்குரியது. மாத்திரமன்றி கல்முனை வலயக் கல்வி அலுவலக கல்விய லாளர்களின் காப்பகப் பணியில் இந்நூல் நிலைத்து நிற்கக்கூடிய சான்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## என் தந்தை,
## அன்பிற்கு இலக்கியமானவர்
## நட்புக்கு இலக்கணமானவர்

**அனோஜ் பிர்தௌஸ்**
சட்டமாணி (சிறப்பு),
சட்டத்தரணி

ஒவ்வொரு குழந்தைக்கும் பெற்றோரை, பிறந்தது முதல் தெரியும். அந்த வகையில் விழா நாயகன் கலாநிதி சத்தார் எம். பிர்தொளஸை 30 வருடங்களாக எனக்குத் தெரியும். மிகவும் பாசமான எனது வாப்பா சிறுவயதிலிருந்தே நல்ல தந்தையாக மட்டுமல்லாது ஆசானாக பல நேரங்களில் சிறந்த நண்பனாகவே இப்போதும் இருக்கிறார். வீதி ஓரத்து மரங்களுக்கும், வீட்டோரத்து தென்னை களுக்கும், தம்பி வளர்க்கும் புறாக்களுக்கும் கூடத்தான்.

எனது வாப்பா கடின உழைப்பாளி. ஒரு விடயத்தை, ஒரு இலக்கை அடைய கடின உழைப்பை முதலிடுபவர். அதற்கான பலனும் பலநேரங்களில் அவருக்குக் கிடைத்ததுண்டு. அதைப் பார்க்கும் போதெல்லாம் நான் வியந்து நிற்பேன்.

அவருடைய M.Phil, PhD படிப்புகள் என் கண்முன்னால் சாதிக்கப்பட்டவைதான். வாப்பாவின் PhD படிப்புக் காலத்தில் உம்மா வழங்கிய ஊக்குவிப்பிலும் அவர்கள் இருவரதும் நிலை களைக் கண்டும் நான் அதிசயித்ததுண்டு.

வாப்பா *Is My Hero*
வாப்பா *Is My Role Model*
என்றெல்லாம் கூறுவதையிட்டு நானும் மகிழ்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைய விடயங்களில் வாப்பா எனக்கு முன்னுதாரணமாக இருந்திருக்கிறார். பிரத்தியோகமாக கற்பிக்கும் டியூசன் வகுப்புகள், கல்விக் கல்லூரி வகுப்புகள், பல்கலைக்கழக விரிவுரைகள் என்ற பரபரப்பான வாழ்க்கைக்குள்ளும் என்னை Elocution முதல் A/L வகுப்புகள் வரை ஏற்றி இறக்குவார். கொஞ்சமும் சலித்துக் கொள்ளமாட்டார். அதிகாலை ஐந்து மணிக்கு அருள்குமரன் சேருடைய பிஸிக்ஸ் வகுப்பிற்காக காரைதீவு பாரதி டியூட்டரியில் நான் இருக்க வேண்டும். சுபஹ் தொழுத கையோடு என்னையும் கோர்த்துக்கொண்டு செல்வார். அதேபொழுது அவருக்கும் அங்கு A/L வகுப்பென்றும் GAQ என்றும் மாணவர்கள் காத்திருப்பார்கள்.

"ஒரு விடயத்தில் ஈடுபடும் போது நம்மால் இயன்ற அதிகபட்ச உழைப்பை அதில் நாம் முதலிட வேண்டும்" என வாப்பா அடிக்கடி சொல்லிக்கொண்டே இருப்பார். அவ்வாறே நடந்தும் காட்டுவார். LLB (Hons) ஆக சிறப்புச் சித்தி பெறுவதற்கும் இலங்கை சட்டக் கல்லூரியிலிருந்து சிறப்பாக சித்தி பெறுவதற்கும் இலங்கை மன்றாடியார் திணைக்களத்தில் பயிற்சி பெறுவதற்கும் (Attorney General Department) நேர்த்தியாக வழிகாட்டியவர் எனது Hero வாப்பாதான். முக்கியமான தருணங்களில் வாப்பா இப்போதும் என்னை Abdate செய்வார்.

"மகன் நீங்கள் விஞ்ஞானம் படித்த சட்டத்தரணி" என்று சொல்லி மாற்றி யோசிக்கச் செய்வார் - எனது தம்பி மருத்துவ பீட மாணவன் Ahamed Deedat ற்கும் இதே மாதிரி Boost தான் வாப்பா வழங்கிக் கொண்டிருப்பார். வாப்பாவின் நிழலாக உம்மா சபீனா கூடவே எப்போதும் இருக்கிறார்.

நான் எனது வாப்பாவைப் பார்த்து வியந்தது மட்டுமல்ல, பொறாமைப்பட்ட நேரங்களே அதிகம். ஓய்வே இல்லாத கற்பித்தல், எப்போது காண்கையிலும் புத்தகமும் கையுமாக வாசித்துக் கொண்டே இருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைக்கிளோட்டியாக, **சைக்கிளின் கிறீன்** செயற்பாட்டாளராக, விமர்சகராக, ஆய்வாளராக, மேடைப் பேச்சாளராக, பள்ளி வாசலின் டிரஸ்டியாக, கட்டடக்குழுவின் செயலாளராக, நடிகராக, நடனகர்த்தவராக எனப் பன்முக ஆளுமைகளை பார்த்து பரவசப் படுவேன்.

எங்கு சென்றாலும் என் தந்தையின் நண்பர்கள் இருப்பார்கள். மாணவர்கள் கூடிவிடுவார்கள். அவர்கள் காட்டும் அன்பையும் பண்பையும் காண்பதில் நான் அதிகம் ஆனந்திப்பேன்.

எங்களது மிகப்பெரிய சொத்தான எங்கள் தந்தையை எங்களுக்கு அளித்த வல்ல அல்லாஹ்வை புகழ்ந்தவனாக அவருக்காக விடா முயற்சியுடன் பணிநயப்பு விழா எடுக்கும் முதன்மொழி ஆசிரிய மையத்திற்கும் அது சார்ந்த சமூகத்திற்கும் மூத்த புதல்வன் என்ற வகையில் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# My Hero
# My Dady

**M.F. அஹமட் டடாட்**
மருத்துவ பீட மாணவன்
கிழக்கு பல்கலைக்கழகம்

என் 24 வருடவாழ்க்கையில் நான் கண்ட மனிதர்களுக்குள்ளே என் தந்தை வித்தியாசமானவர். அவர் சிறந்த தந்தையாகவும் சிறந்த முன்மாதிரியாகவும் எப்போதும் இருந்துள்ளார். என் வாழ்க்கையில் எவற்றை எல்லாம் செய்ய வேண்டும் எவற்றை எல்லாம் விட்டு விலக வேண்டும் என்பதை அவருடன் இருந்து சிறந்த அனுபவமாய் கண்டுள்ளேன், கற்றுள்ளேன்.

என் வாழ்கைக் காலத்தில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சரியான நேரத்தில் சரியான வழிகாட்டல்களையும், ஆலோசனைகளையும் தந்து என்னை நேரான பாதையில் என் கைபிடித்து அழைத்துச் சென்று இன்று வைத்திய பீட மாணவனாக பறக்கவிட்டு என்னைப் பார்த்து ரசிக்கிறார். ஆனால், அதைக் காட்டிக்கொள்ளமாட்டார்.

அவரின் வழிகாட்டலுக்கு சிறந்த உதாரணமாக நானும் எனது மூத்த சகோதரர் அனோஜ் சட்டத்தரணியும் சான்றாக உள்ளோம். எப்போது நான் சரியான முடிவு எடுக்க முடியாமல் தடைக்கற்களில் தடக்கி நிற்பேனோ அப்போது நான் அவரை நாடாமலே அவரே என் முகத்தைப் பார்த்து, என் செயல்களைப் பார்த்து அவரே கண்டறிந்து என்னிடம் வந்து என்ன? ஏது? என்று கேட்டு மிகச் சரியான ஆலோசனைகளைத் தந்து விடுவார். எப்போதும் எங்களைக் கண்காணிப்பார். அது எங்களுக்கு தெரிவதில்லை. ஆனால் சரியான சந்தர்ப்பங்களில் அவராகவே வந்து எங்கள் அருகில் நிற்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் சொல்லுவார் "யாரையும் நம்பாதே..." ஏனெனில் அவர் எல்லோரையும் இலகுவில் நம்பிவிடுவார். அதனூடாக அவர் நிறைய பாடங்களைக் கற்றுள்ளார், நிறைய துரோகங்களைச் சந்தித்துள்ளார். அதனால் எங்களுக்கு அறிவுறுத்துவார். இருந்தும் அவர் எல்லோரையும் இலகுவில் நம்புபவராகவே இன்றும் உள்ளார். அதுதான் என் தந்தையின் குணம். ஆனால் அவருக்கு எதிரான துரோகங்கள் நடக்க நடக்க அவர் வாழ்கையில் உயர்ந்து கொண்டே சென்றுள்ளார், தாழ்ந்ததில்லை.

தின்பாருக்கு தேன் எடுத்துக்கொடுப்பதே அதிகம். அதை உண்டுவிட்டு நன்றி இல்லாமல் நடப்பவர்களை என் தந்தையின் வாழ்வின் ஊடாக கண்டுள்ளோம், அறிந்துள்ளோம்.

அவரது உயர்வுக்குக் காரணம் பிறருக்கு உதவி செய்வதும் பிறரின் உயர்வுக்கு உறுதுணையாக இருப்பதும், அவர்களின் உயர்வைப் பார்த்து அகம் மகிழ்வதும் பிறருக்கு தீங்கு நினையாமல் இருப்பதும், தீங்கிழைத்தவனைக்கூட மன்னிக்கும் மனப்பான்மையும் தான் அல்லாஹ் அவரின் நற்குணம்களை அறிந்தவன் அல்லவா?

அதேவேளை நாங்கள் தவறிழைக்கும்போது அவர் எங்களை தண்டிக்க தவறியதில்லை. தண்டிக்கவேண்டிய நேரம்களில் நன்றாகவே தண்டித்துள்ளார் "அடி உதவுவது போல் அண்ணன் தம்பியும் உதவமாட்டான்" என்று செல்வது பொய் அல்ல. அனோஜ் பெரிதாக அடிவாங்கியதில்லை. ஆனால் நான் ஓரளவிற்கு வாங்கியுள்ளேன். இன்று அதனை நினைத்துப் பார்க்கும்போது அவற்றால் தான் பட்டை தீட்டப்பட்டேன் என்பதை உணர்கிறேன், சிரிக்கிறேன்.

நான் மருத்துவ பீடம் நுழைய வேண்டும் என்பது எங்களின் மொத்த குடும்பத்தினதும் அவா. அவர்களின் நம்பிக்கையாகவும் திகழ்ந்தேன். அந்த நம்பிக்கையை என்னுள் விதைத்து உற்சாக மூட்டி சாதிக்க வேண்டும் என்ற பெருவிசையை தந்தவர்கள் என் தந்தையும், தாயும், என் மூத்த சகோதரனும் என்பதே உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு நாபகமிருக்கிறது வாப்பா... நான் A/L படிக்கும் போது அதிகாலை 4 மணிக்கு எழுப்பி விடுவீர்கள், 5 மணிக்கு Physics பாடத்திற்கு அழைத்து செல்வீர்கள். (கல்முனைக்கு Motor Bike இல்) பின்னர் 7 மணிக்கு மீண்டும் ஏற்ற வருவீர்கள். அதேபோல் காரைதீவுக்கு என்னை அழைத்துச் செல்வீர்கள் எல்லா நாட்களும் இப்படியே... நீங்கள் தந்தையாக கிடைத்தமை பெரும்பாக்கியம் வாப்பா. நீங்கள் இல்லாமல் நான் இந்நிலையில் இல்லை.

**Your are my Hero Dady**

உங்களுடையதும், உம்மாவுடையதும் ஆரோக்கியத்திற்காக இரு கரம் ஏந்துகின்றேன் இறைவனிடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசானாக சந்தித்த வேளை

திருமதி. பிறேமினி ஜீவரெட்ணம்
சிரேஷ்ட ஆசிரியை,
உவெஸ்லி உயர்தர பாடசாலை

1998.05.18 ஞாயிற்றுக் கிழமை பிரத்தியேக வகுப்பிற்கு உயர் தரம் படிக்கலாம் என்று வகுப்பில் சேர்ந்தேன். தமிழ் பாடம் 12 மணிக்கு தூக்கம் வரும் வேளை பசிக்களை வகுப்பிற்குள் உள் நுழைந்த போது அழகிய சொருபத்துடன் நடிபாங்கில் சங்ககால பாடல். ஆசானை பார்த்தவாறே அமர்ந்தேன். நேரம் போனது தெரியவில்லை அன்றுதான் நானும் ஓர் ஆசிரியையாக வரவேண்டும் என்ற எண்ண அலை எனக்குள் ஓடியது.

"உன்னால் முடியும் என்று எண்ணுவதையோ அல்லது முடியும் என்று கனவு காண்பதையோ துணிந்து தொடங்கு. உனது துணிவிலேயே அறிவும், ஆற்றலும் மந்திரமும் அடங்கியுள்ள நம்பிக்கையோடு உன் முதலடியை எடுத்துவை முழுப் படிக் கட்டையும் நீ பார்க்க வேண்டிய அவசியமில்லை முதல் படியில் ஏறு"

என்ற அறிவுரை அவரது பாட இறுதியில் ஒலித்தது. இவ்வாறு ஒவ்வொரு வகுப்பிலும் பாடத்துடன் ஊக்க உரைகளான அறிவியல் சிந்தனைகளோடு ஆசான் எங்கள் ஆசான் பிர்தௌஸ் மகிழ்ச்சியுடன் நானும் ஆசானாரும் கனவும் தொடர்ந்தது.

நேற்று என்பது உடைந்த மண்பானை
நாளை என்பது மதில்மேல் பூனை
இன்று என்பது ஓர் அழகிய வீணை
துன்பம் இல்லாத இன்பமும்
முயற்சி இல்லாத வெற்றியும் எப்போதும் நிலைப்பதில்லை

எனப் பல முயற்சிகளுடன் வீரநடை போட்ட எங்கள் ஆசானை நான் ஒரு ஆசிரியராக 2018.05.15இல் கல்முனை வலயத்தில் சந்தித்தேன். என்ன ஒரு அதிசயம்! 1998இல் பார்த்த அதே அழகிய சொரூபம், கொஞ்சமும் மாற்றமில்லை இளமைக்கோலம் பல பட்டங்களும் பதவிகளுடனும் ஒரு நிலையில் எங்கள் ஆசான் உதவிக்கல்விப் பணிப்பாளராக...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டங்கள் மனிதர்களுக்கு பெருமை சேர்ப்பதில்லை மனிதர்கள் தான் பட்டங்களுக்கு பெருமை அளிக்கிறார்கள் பல பட்டங்களுக்கு பெருமை அளித்தவர் பிர்தௌஸ் சத்தார் ஒரு தேசத்தின் மகுடமே அதன் சிந்தனையாளர் கலாநிதி சத்தார் பிர்தௌஸ்

ஆசானுடன் இணைந்து சேவையாற்றும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. பயணங்கள் ஆறு ஆண்டுகளானது. நாட்கள் நகர்ந்தன. தினங்களில் தமிழியல் பற்றிப் பேசிக் கொண்டவை ஏராளம். அதில் சில,

மருதமுனை மண்ணின் மைந்தனே மாண்புமிகு மாணவனே!
பேராதனை பல்கலைக்கழகத்தின் சாதனையாளனே!
ஊடகத்துறையில் சிறந்த அறிவிப்பாளர் விருதும் நடிகன் விருதும் பெற்றவனே!

உழிகொண்டு சிலைசெய்து இனிதாக செதிக்கிடும் சிற்பம் போல சிற்பியாய் வந்த சிகரமே!
சிந்தனைகளை சிகரமாக்குவதும் சிறப்பென்று வரும் போது உலகம் வியக்க நிலைப்பதும் ஆசி என்று வரும் போது உலகினில் தந்தை போல எல்லா ஆசிரியர்களுக்கும் - சுடர் ஒளியாய் திகழ்வது உன்பணியானதே!

ஆசானே! சேரின் Bio Data வையும் பெறுபேற்றுக் கோவையையும் பார்வையிட்டபோது திகைத்து நின்றேன்.

ஆரம்பக்கல்வி அல்-மனார் மத்திய கல்லூரி
உயர் கல்வியும் அதுவே...

மருதமுனையின் அப்துல் சத்தார் ஜென்னத்துக்கு மூத்த மகன் மூன்று சகோதரர்களும் ஆறு சகோதரிகளும் பெற்ற என் சொத்து பேராதனை பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட முத்து சிறந்த அறிவிப்பாளர், நடிகர் விருதும் பெற்று இறுதியாண்டிலே ஆங்கில ஆசிரியராக நியமனம் கலைமாணி (BA), முதுகலைமாணி (MA), முதுகலைத்துவமானி (MPhi); கலாநிதி பட்டம் (PhD) பின் டிப்ளோமா (PGDE) இன்று உதவிக் கல்விப் பணிப்பாளர் தமிழ் (SEUSL) விரிவுரையாளர் கல்விக்கல்லூரி, ஆசிரிய பயிற்சி கலாசாலை விரிவுரையாளரும் கூடவே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுகளை எண்ணங்களாக மாற்றுங்கள்
எண்ணங்களை செயல்களாக மாற்றுங்கள்
நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்காலம் - ஆனால்
நமது இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்

குருவே நீங்கள் ஆசிரியராக தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளராக, பன்முகப் படைப்பாளியாக, தமிழ்த் தாயின் தலைமகனாக எப்படி உங்களால் வாழ முடிந்தது? என்பதற்கு இவ்வரிகள் எங்கள் பதிலானது.

எளிய நடையில் தமிழ் நூல் எழுதிடவும் வேண்டும்.
இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்.
வெளியுலகில் சிந்தனையில் புதிது புதிதாக விளைந்துள்ள எவற்றினுக்கும்
பெயர்களெல்லாம் கண்டு தெளிவுறுத்தும் படங்களோடு சுவடியெல்லாம் செய்து
செந்தமிழை செந்தமிழாய்ச் செய்வதும் வேண்டும்.
எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்
உலகியலின் அடங்கலுக்கும்
துறைதோறும் - நூற்கள்
ஒருத்தர் தயை இல்லாமல் ஊரறியும்
தமிழில் சலசலவென எவ்விடத்திலும் பாய்ச்சிவிட வேண்டும்!
தமிழ் ஒளியை மதங்களோடு சாய்க்காமை வேண்டும்!

எங்கள் தமிழ் உயர்வென்று நாம் சொல்லிச் சொல்லித் தலை முறைகள் பல கழித்தோம் குறைகளைந்தாய் குற்றமில்லா தமிழை தாபிப்போம் வாரீர்!........

ஒரு தினம் பாடசாலையில் மனச்சோர்வுடன் நின்று கொண்டிருந் தேன் அப்போது ஒரு ஆறுதல் குரல் "பிறேமினி கவலைப்படாதே இது இல்லையென்றால் இன்னொரு பாடசாலை. நமக்கு எதுவும் நிரந்தரமில்லை" என உதவிக் கல்விப்பணிப்பாளராக....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்விகளை எதிர்கொள்ள கற்றுக்கொள்ளுங்கள். அது தான் வெற்றிக்கான மிக முக்கியமான திறமை. உங்களுக்கு சிறகுகள் உள்ளன. தவழ்ந்து செல்லாதீர்கள். அதைக் கொண்டு மேலே மேலே பறந்து செல்லுங்கள். எல்லாப் பறவைகளும் மழைக் காலங்களில் கூடுகளில் அடையும். ஆனால் கழுகு மழையை தவிர்க்க மேகத்துக்கு மேலாக பறக்கும்....

இதன் பிறகு எனக்குள் ஒரு தைரியம். நடப்பது நடக்கட்டும் என்று பயணித்தேன். அவரது கவலையற்ற முகமும் தைரிய மூட்டும் அறிவும் தன்னலமில்லா பொதுநல நோக்கும் இன மத பேதங்களுக் கப்பாற்பட்ட சிந்தனைகளும் எனக்குள் விதைக்கப்பட்டது.

வெற்றி வந்தால் பணிவு அவசியம்
தோல்வி வந்தால் பொறுமை அவசியம்
எதிர்ப்பு வந்தால் துணிவு அவசியம்
எது வந்தாலும் நம்பிக்கை அவசியம்
நீச்சல் அடிக்கத் தெரிந்தவனுக்கு கடல் எவ்வளவு ஆழம் என அறியத் தேவையில்லை...
வாழ்க்கையை ரசிப்பவனுக்கு
பிரச்சினை ஒன்றும் பெரிதில்லை
பிரச்சினை இல்லாத - வாழ்க்கை
இயந்திர மனிதனைப் போன்றது - இயக்கம் இருக்கும் உணர்வு இருக்காது.

இதைத் தாண்டியும் பல அறிவுரைகளை அள்ளித்தந்து எம் ஆசியரியர் குழாம்களை செயலமர்வுகளில் வழிப்படுத்திய உத்தமராம் எம் ஆசான் என்பதில் எங்களுக்கு எப்போதுமே பெருமிதம். இவ்வாறு காலங்கள் கடந்து செல்ல எங்கள் ஆசானும் ஓய்வுபெறும் நேரம் நெருங்கியது.

கல்விப் பேறுகளின் புனிதமறிந்து
வரவையும சிறக்கும் கல்வியையும்
ஊக்கமும் ஆக்கமும் கொடுக்கும்
மேன்மை உள்ளம் கொண்டுள்ள
காலத்தால் மறக்க முடியாத உதவிக் கல்விப்பணிப்பாளரின் கடமை ஓய்வுபெறும் வேளையிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் ஆசானை எப்படி வாழ்த்துவது தமிழில் வார்த்தைகளும் வரிகளும் சாரலாக வெளிவருகிறது எனக்குள் எம் தமிழ் மொழி ஆசிரியர் குழாங்களுக்குள் ஒரு ஏக்கம் பிரிவை ஏற்க மறுக்கும் உணர்வுகள் கால ஓட்டத்தில் சந்திக்கலாம் செயலமர்வுகளில் என்று ஆறுதல்.

காலம் நமது கடமையை நெறியாக்குகிறது.
காலத்துள் நாம் காவியங்களாகின்றோம்.
கால ஓட்டத்தால் கடமை ஓய்வுபெற்று நிகழ்வின் கருப் பொருளான உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. பிர்தௌஸ் சத்தார் ஓய்வு. கனிவான பிள்ளை மனங்களையும் உயர்வான ஆசிரியர்களின் வெள்ளை மனங்களையும் தெளிவான உயரதிகாரிகளின் வெள்ளை மனங்களையும் கொள்ளை கொள்ள வைத்த உதவிக் கல்விப்பணிப்பாளர் ஓய்வு மனது களை நோகடித்தாலும் இது பெறும் தருணம் என்பதினால் மன மகிழ்வோடு சேவை பாராட்டுகிறோம்.

முப்பத்தி நான்கு வருடங்கள் முத்தான கல்விச் சேவை செய்த அம் மேதையை பாராட்டுவதற்கும் எழுதுவதற்கும் எனக்கு இறைவன் வாய்ப்பு தந்ததில் ஒரு மகிழ்ச்சி. உங்களின் சுறு சுறுப்பு, நளினமாக நடை, கடமையில் கண்ணியம், எதிலும் நிதானம் இத்தனையாலும் பல சாதனைகள் படைத்த விதம் எங்கள் எல்லோரையும் கவர்ந்தது.

பொறுமைக்கும் பொறுப்புள்ள கடமைக்கும்
வலயத்தின் உயர்விற்கும் பக்குவம் பெற்று நிற்கும்
வித்தான முத்து நீங்கள்
கண்ணியமான தருணத்தில்
பலரும் வியக்கும் வண்ணம்
திருத்தமாக சொல்லும் சொல் வளமும்
உமது கடமைக்கு நற்சான்றாகும்.

கல்முனை வலயத்தில் எங்களை தமிழ் பாட ஆசிரியர்களாக சேவை செய்வதற்கு பல வகையிலும் ஊக்கப்படுத்தி உத்தமர் நீங்கள் அல்லவா குறிப்பாக என் திறமையை வெளிக்கொணர்ந்த நல்லாசானும் நீங்கள் தானே...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலயத்தில் எங்கள் ஆசானுடன் இணைந்து செயற்பட்ட அனுபவம் மாறாது "மொழித் திறன் முந்நூறு விடையைப் பார்த்து வினாவிற்கு விடை எழுதுவது" இந்த இரு புத்தகங்களும் இந்த வலயத்தின் சொத்துக்கள்.

*நாங்கள் பரீட்சை எழுத*
*நீங்கள் அல்லவா படித்தீர்கள்*
*நாங்கள் வெற்றி பெற*
*நீங்கள் அல்லவா உழைத்தீர்கள்*
*கல்லும் உடையாமல்*
*சிலையும் சிதறாமல்*
*எங்களை செதக்கிய சிற்பி அல்லவா - நீங்கள் மழையின் அருமை*
*கோடையில் தெரியும்*
*உங்களின் அருமை பெருமை*
*இப்போது எங்களால் உணரப்படுகிறது*

ஒவ்வொரு வளர்ச்சிக்கும் ஒவ்வொரு உதவிக்கல்விப் பணிப்பாளர் உங்களில் சிறியவரகள் நாங்கள் எனினும் வாழ்த்துகிறோம். நன்னலம் பெறவே மனம் நிறைந்துள்ள இறைவன் திருவருளாலே மண்ணில் மகிழ்வுடன் வாழ்க பல்லாண்டு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மருதத்தின் பொக்கிஷமாய் நிலைத்திருக்க வாழ்த்துக்கள்

**கண வரதராஜன்**
ஓய்வுநிலை
உதவிக்கல்விப் பணிப்பாளர்

கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தில் தமிழ்மொழித்துறை ஆசிரிய ஆலோசகராக இணைந்து உதவிக்கல்விப் பணிப்பாளராக ஓய்வுபெற்றுள்ள நண்பன் கலாநிதி பிர்தௌஸ் சத்தார் அவர்களின் சேவையினைப் பாராட்டி கல்முனை வலய முதன்மொழி ஆசிரிய மையம் வெளியிடும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகைகொள்கின்றேன்.

1998 கல்விச் சீர்திருத்த அமுலாக்கத்தின் பொருட்டு வலயங்கள் தோறும் ஆசிரிய ஆலோசகர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக வடக்கு கிழக்கு மாகாணத் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட பரீட்சையில் முன்னிலைப் புள்ளிகளை நானும் நண்பர் பிர்தௌஸ் அவர்களும், திருமதி H.M. முகைதீன் அவர்களும் பெற்றதன் அடிப்படையில் எங்களுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்றது அதன் விளைவாக 10.06.1999 முதல் நானும் டிசம்பர் 10.11.1999ல் நண்பர் பிர்தௌஸ் அவர்களும் உள்வாங்கப்பட்டு ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. வ.சுப்பிரமணியம் சேர் அவர்களது வழிகாட்டலில் பணியாற்றி வந்தோம். காலப்போக்கில் கோட்டங்கள் தோறும் ஆசிரிய ஆலோசகர்கள் நியமிக்கப்படலாம் எனும் அடிப்படையில் திருமதி H.M. முகைதீன் (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்) அவர்களும் எங்களுடன் இணைந்துகொள்ள திரு. சுப்பிரமணியம் சேர் அவர்களின் தலைமையில் இயல் இசை நாடகம் எனும் முத்தமிழும் விளங்கும் ஒரு மன்றமாக பணியாற்றி வந்தோம்.

திரு. வ. சுப்பிரமணியம் சேர் அவர்கள் 2007ல் ஓய்வு பெற்றதால் உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடமானபோதும் எங்களுக்குள் கட்டி வளர்க்கப்பட்ட பிணைப்பு அதை ஒரு இடை வெளியாக கருதாமல் அவரவர் பணியைச் செய்யத் தூண்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்"

எனும் வள்ளுவன் வாக்கிற்கேற்ப செயற்படும் இயல்பு பிர்தௌஸிடம் காணப்பட்டது. தனக்கு கிடைத்த காலத்தை பயன்படுத்தி PhD பட்டப்படிப்பை கிழக்குப் பல்கலைக்கலகத்தில் முடித்துக்கொண்டார். பிர்தௌஸ் கலாநிதிக் கற்கைக்காக சென்றதாலும். 2011 காலப் பகுதியில் திருமதி H.M. முகைதீன் அவர்கள் ஓய்வுபெற்றதாலும் நான் தனித்துவிடப்பட்டேன். 13.06.2012 முதல் உதவிக் கல்விப் பணிப்பாளர் பொறுப்பினை ஏற்று செயற்பட்டபோது நண்பர் பிர்தௌஸ் கல்முனை வலய தமிழ்த்துறையில் ஓர் கலாநிதி எனும் பெருமையுடனும் மிடுக்குடனும் இணைந்துகொண்டார். தமிழ்த் துறையில் இரட்டையர் என கல்விச் சமூகம் போற்றத்தக்கவகையில் செயற்பட்டோம் இவரது இணைவினால் கல்முனை வலயப் பாடசாலைகள் பாட மேம்பாட்டிலும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் சாதனைகள் பல படைத்தன.

கடந்த 17.11.2019ல் நான் ஓய்வு பெற்றதும் உதவிக் கல்விப் பணிப்பாளர் பொறுப்பு அவரைச் சார்ந்தது. கொவிட் 19 அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் தனித்தவராய் பணியாற்றி அடைவு மட்டத்தை மேம்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வெற்றி கண்டார். அகில இலங்கைத் தமிழ்மொழித் தினம் 2022 தொடர்பான வலய மட்டப் போட்டிகளையும் மாவட்ட மட்டப் போட்டிகளையும் சிறப்பாக நடத்தி முடித்தார்.

அவரது தகுதிக்கும் திறமைக்கும் உயர் கல்வி சார்ந்த நிறுவனங் களில் அவர் பணியாற்றுவதே சிறந்தது என்று அடிக்கடி நான் கூறி வந்தேன். எனது அறிவுரைக்கேற்ப கடந்த 07 வருடங்களாக தென் கிழக்கு பல்கலைக்கழக வருகை விரிவுரை யாளராக கடமையாற்றுவது மிக்க மகிழ்ச்சி தருகிறது. அவரது அப்பணியும் தொடர வேண்டும் என்பதே எனது அவா. தனது சேவைக் காலத்தில் செயற்கரிய செய்து அகவை அறுபது கடந்தும் தளராத வனப்புடன் திகழும் நண்பன் பிர்தௌஸ் எதிர்காலத்தில் சமூக இலக்கியப் பணிகளில் மென்மேலும் சாதனைகள் படைத்து மருதவூரின் பொக்கிஷமாய் நீடித்து நிலைத்திருக்க வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலராசிரியரிடமிருந்து...

**ஜெஸ்மி எம். மூஸா**
விழாக்குழு தலைவரும்
மலராசிரியரும்

பாடசாலை அதிபர்கள் பலரின் ஓய்வுக்கான மலர்களைச் சமைப்பதிலும் இலக்கியம்சார் நூல்கள் பலவற்றிற்கு உரைகளை பதிவாக்கியதிலும் அனுபவங்கள் கடந்துவிட்ட போதிலும் கல்முனை கல்வி அலுவலகத் திலிருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் கலாநிதி சத்தார் எம். பிர்தௌஸ் அவர்களுக்கு உரை யொன்றினை வழங்குவதே பெரும்பேறும் கனதியும் கௌரவமும் என்பேன். காரணம் தமிழ் மையத்திலுள்ள பலருக்கும் அவர் ஆசிரியர் போல் என்னையும் இந்தளவிற்கு கொண்டு வந்து சேர்த்து விட்ட கௌரமிக்க ஆசிரியரும் அவரே.

கலாநிதி சத்தார் எம். பிர்தௌஸ் 2022.11.13ஆம் திகதியுடன் உத்தி யோகபூர்வமான ஓய்வினைப் பெற்றுக்கொண்டவரான போதிலும் கல்முனை கல்வி வலயத்திலிருந்து 2022.12.31 ஆம் திகதி அன்றே தம் பணிக்கு விடை கொடுக்கிறார். அன்னாரது பணிநிலை ஓய்வினை முன்னிட்டு கல்முனை கல்வி வலய தமிழ்மொழி ஆசிரியர் மையம் பணி நயப்பு விழாவொன்றினை ஏற்பாடு செய்துள்ளமை முக்கியத்துவ முடைய செய்தியாகும்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் சத்தார் எம். பிர்தௌஸின் பணி நயப்பு அடை யாளமாக வெளியிடப்படும் "தீரா ஆசிரியம்" எனும் இந்நூல் அதிக சிறப்புக் குரியது. கதாநாயகனது பல்வேறு தகவல்களையும் உள்ளடக்கிய விடயங்கள் இந்நூலில் சாரப்படுத்தப்பட்டுள்ளன.

விழாவின் பிரதம அதிதி, கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம் உட்பட உரைகளை வழங்கிய அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றிகள்.

விழா மலரினை வடிவமைத்த ஏ.எச். முகம்மட் பாயிஸ் (Mofa), அச்சாக்கம் செய்தவர்கள் மற்றும் விழாவுக்கான ஏற்பாட்டுக் குழுவினர் அனைவருக்கும் நன்றிகளைப் பகிர்ந்தளிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KALMUNAI ZONE

## G.C.E. (O/L) Results Analysis

Last 08 years (2014 - 2021)

| TAMIL | | | |
|---|---|---|---|
| YEAR | SAT | PASS | PASS% |
| 2014 | 2005 | 1638 | 81.7 |
| 2015 | 2075 | 1834 | 88.4 |
| 2016 | 2342 | 1902 | 81.2 |
| 2017 | 2259 | 2085 | 92.3 |
| 2018 | 2236 | 2077 | 92.9 |
| 2019 | 2367 | 2245 | 93 |
| 2020 | 2297 | 2108 | 91.77 |
| 2021 | 2815 | 2550 | 90.59 |

KALMUNAI ZONE

## G.C.E. (A/L) Results Analysis

Last 08 years (2014 - 2021)

| TAMIL | | | |
|---|---|---|---|
| YEAR | SAT | PASS | PASS% |
| 2014 | 279 | 255 | 91.4 |
| 2015 | 256 | 222 | 86.7 |
| 2016 | 250 | 220 | 88.0 |
| 2017 | 292 | 248 | 84.9 |
| 2018 | 284 | 246 | 86.6 |
| 2019 | 230 | 212 | 92.0 |
| 2020 | 248 | 235 | 94.75 |
| 2021 | 235 | 211 | 90.0 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரத்திற்கோர் வைர விழா

பாத்திமா ஸ ீபா

ஆசிரியர் புடைசூழ
நானும் அதில் சேர
என் ஆசானை வாழ்த்தும்
வரம் எனக்களித்த
இறைவனுக்கே
புகழ் அனைத்தும்
அல்ஹம்துலில்லாஹ்...

என் தமிழும்
அதனழகும்
உனக்கே சொந்தமென
நான்
மார்தட்டிக் கொண்டதுண்டு.

இலங்கு எயிறும்
இலக்கிய நடையும் உம்
புன் முறுவல் கண்டு பூக்கிறது
தமிழ்.

இலக்கியத்தை
நயம்பட
ஊட்டியே தமிழ் வளர்த்த
எங்கள்
ஆசானுக்கு பணி நயத்தல்
விழா இன்று.

நாவூறித் தேனூறும் உம்
தமிழ் கண்டு
தமிழ் அன்னை மார்தட்டி
நின்றதுண்டு.

இலக்கியமாய் வலம் வந்த
உம் வாழ்வின்று
இலக்கணமாய்
பதியப்படும் நாளின்றோ?

கல்வி நிறுவனங்களில்
நீர் விதைத்த
தமிழ் விதைகள்
விருட்சமாய் வளர்ந்தோங்கி
நாள்கள் தோறும் உம்
நாமம் சொல்லும்.

நெடுந்துயர்ந்த தமிழ்ப்
பணியில் இனி
ஓய்வுற்று இருந்தாலும்
பாரெங்கும் முரசொலிக்கும்
உம் நாமமே.

தமிழ் ஆழி கண்டெடுத்த
முத்து மணி ரத்தினத்தை
நீண்ட ஆயுளுடன்
வாழ்கவென
வாழ்த்துகிறேன்.

வாழ்க வளமுடன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலய முதல்மொழி ஆசிரிய மைய ஆசிரியர்கள்

### கல்முனைக் கோட்டம்

**கமு/கமு/ அல்-மனார் மத்திய கல்லூரி (தே.பா) - மருதமுனை.**

01. திருமதி. R.M. அக்ரம் - பாட இணைப்பாளர் 077 6544750
02. திரு. M.M. ஜெஸ்மி
03. திரு. A.M. றியாஸ்
04. திருமதி. M.M. பஜீலா
05. திருமதி. T. வதனா
06. திருமதி. A.S.Z. முனவ்வரா
07. திருமதி. M.I.F. மின்னாஹ்
08. திரு. E. முனீர்
09. திருமதி. T. சோதிமலர்
10. திருமதி. A.M. றுஸ்மானா
11. திருமதி. A.M.S. நஸூஹா
12. திருமதி. M.A. சஹ்னாஸ் பேகம்
13. திரு. A.M. றியாஸ்

**கமு/கமு/ ஷம்ஸ் மத்திய கல்லூரி (தே.பா) - மருதமுனை.**

01. திருமதி. M.M.R. ஹாமிலா - பாட இணைப்பாளர் 076 0328212
02. திருமதி. M.F.F. நஸ்றின்
03. திரு. M.M. அஸ்லம் சஜா
04. திருமதி. M.M. ரக்ஸான் பர்ஜீஸ்
05. திருமதி. S.N.M. அன்வர்
06. திரு. A.H. நஸ்றுத்தீன்

**கமு/கமு/ புலவர்மணி ஷரியுத்தீன் வித்தியாலயம் - பெரியநீலாவணை.**

01. திருமதி. S.M.S. பஜீலா - பாட இணைப்பாளர் 077 4662115
02. திரு. A.R.A. புகாரி
03. திரு. T.L.M. தமீம்
04. திருமதி. A. ஜெஸ்மிலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கமு/கமு/ அல்-ஹம்றா வித்தியாலயம் - மருதமுனை.

01. திருமதி. S.R.A. கனி - பாட இணைப்பாளர் 075 2026394
02. திருமதி. S.M. ஜமால்தீன்
03. திருமதி. S.H. ரஹ்மான்
04. திருமதி. S.H. ஆதம்பாவா
05. திருமதி. M.Y. சதீக்கா
06. திருமதி. M.A.I. கிபாயா

## கமு/கமு/ அல்-மதீனா வித்தியாலயம் - மருதமுனை.

01. திருமதி. M.I. பர்ஸானா - பாட இணைப்பாளர் 077 7606987
02. திருமதி. S.F. அமீருஸ்சமான்
03. திருமதி. A.R.N. றிஸ்வானா
04. திருமதி. A.R.N. றிஸ்வானா
05. திருமதி. H.M. நவாஸ்

## கமு/கமு/ அல்-பஹ்றியா மகா வித்தியாலயம் - கல்முனை.

01. திருமதி. S.L. றொஸானா - பாட இணைப்பாளர் 077 4329268
02. திரு. I.A. அஷ்ரப்
03. திருமதி. U.L. ஹிதாயா
04. திருமதி. S.T. நிஹாறா
05. திருமதி. A. றிஸானா
06. திருமதி. M.B. சபீ

## கமு/கமு/ அல்-மிஷ்பா மகா வித்தியாலயம்

01. திருமதி. றிபாயா ஜெஸ்மின் தாஹிர்
02. திருமதி. A. தௌபீக்கியா
03. திருமதி. K. ஜெஸீனா
04. திருமதி. S.L.S. மர்ஜுனா
05. திரு. E. ஜெகந்னாதன்
06. திரு. M.C.M. உவைஸ்
07. திரு. C. தௌபீக்
08. திரு. A. ரஷ்மி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கமு/கமு/ ஷாஹிரா கல்லூரி - கல்முனை (தே.பா)

01. திரு. I.L. அல்லாஹ்பிச்சை - பாட இணைப்பாளர் 077 9836019
02. திருமதி. U.L.S. றூபினா
03. திருமதி. A.G.A. அஸ்கா
04. திருமதி. S.M. ரயீஸ்
05. திருமதி. M.R.A. இஸ்ஸத் ஜஹான்
06. திருமதி. A.A. சயான் ஹஸ்மத்
07. திருமதி. A.R.F. சூபா
08. திருமதி. S.L. உஸ்னா
09. திருமதி. L.A. அலீம்
10. திருமதி. S.L. ஹஸ்கி
11. திருமதி. M.R. ஹஸ்னி பானு
12. திருமதி. S. போசனா
13. திருமதி. R.U. சிபானா
14. திருமதி. A.W. பர்ஸானா

## கமு/கமு/ மஹ்மூத் மகளிர் கல்லூரி - கல்முனை (தே.பா)

01. திருமதி. M.A.S. ஜனூஸா - பாட இணைப்பாளர் 077 8207775
02. திரு. M.M.A. ஹகீம்
03. திரு. A. றிபான்
04. திரு. M.H.M. றிபியான்
05. திருமதி. A. ஆமினா பேகம்
06. திருமதி. M.S. ஆயிஷா
07. திருமதி. M.I. றிஸ்மியா
08. திரு. N.A.C. உபைதுல்லாஹ்
09. திருமதி. A.M. றியானா
10. திருமதி. A. அமீர்அலி

## கமு/கமு/ இஸ்லாமாபாத் வித்தியாலயம் - கல்முனை.

01. திருமதி. M.I. ரமீமா - பாட இணைப்பாளர் 075 6512216
02. திரு. A.R. பயறூஸ் கான்
03. திரு. J. பாலகிருஷ்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கமு/கமு/ லாபிர் வித்தியாலயம் - நற்பிட்டிமுனை.**

01. திருமதி. R. ராமலிங்கம் - பாட இணைப்பாளர் 076 1136865
02. திரு. M.Y.M. தஸ்ரிப்

**கமு/கமு/ அல்-அக்ஷா மகா வித்தியாலயம் - நற்பிட்டிமுனை.**

01. திருமதி. J. பளீலா - பாட இணைப்பாளர் 075 5595740

## கல்முனை தமிழ்க் கோட்டம்

**கமு/கமு/ விஷ்ணு வித்தியாலயம் - நீலாவணை.**

01. திரு. S. நவேந்திரன் - பாட இணைப்பாளர் 077 1352311
02. திருமதி. P. புலேந்திரன்
03. திருமதி. J. குகநாதன்
04. திருமதி. R. சரோஜினி

**கமு/கமு/ பாண்டிருப்பு மகா வித்தியாலயம் - பாண்டிருப்பு.**

01. திருமதி. V. வினோஜினி - பாட இணைப்பாளர் 077 4858423
02. திரு. V. ரவிச்சந்திரன்
03. திருமதி. K. சிவசந்திரமூர்த்தி

**கமு/கமு/ கார்மேல் பாத்திமா கல்லூரி ஆண்கள் பிரிவு (தே.பா)**

01. திருமதி. S. ஜெயகுலராஜன் - பாட இ. 077 1927552
02. திருமதி. P. மாசிலாமணி - பாட இ. 077 4389464
03. திருமதி. V. வசந்தன்
04. திருமதி. ராஜிதா
05. திருமதி. A. சகாயநாதன் (பெண்கள் பிரிவு C.F.C.)
06. திருமதி. M. சசிகரன்
07. திருமதி. G. சுதர்சன்
08. செல்வி. S. ஜனனி
09. திரு. M.I. இஸ்ஸதீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கமு/கமு/ பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயம் - பாண்டிருப்பு.**

01. திருமதி. சாந்தக்குமாரி பரமலிங்கம் - பாட இணைப்பாளர்

**கமு/கமு/ உவெஸ்லி உயர்தரப் பாடசாலை - கல்முனை.**

01. திருமதி. R. அல்விஸ் - பாட இணைப்பாளர் 075 5763099
02. திரு. T. சந்திரகுமார்
03. திருமதி. Y. பாஸ்கரன்
04. திருமதி. T. குமுதன்
05. திருமதி. S. மதியழகன்
06. திருமதி. P. ஜீவரட்ணம்
07. திருமதி. J. மோகன்
08. திரு. S. மகேந்திரராசா

**கமு/கமு/ R.K.M. மகா வித்தியாலயம் - கல்முனை.**

01. திரு. K. தவராஜா - பாட இணைப்பாளர் 077 1961120

**கமு/கமு/ சிவசக்தி மகா வித்தியாலயம் - நற்பிட்டிமுனை.**

01. திருமதி. மங்களவாணி விசுவரமணன் - பாட இ. 075 4627183
02. திருமதி. பிரதீபா பிரபாகரன்
03. திருமதி. சுசிலா சேகரர்

## காரைதீவு கோட்டம்

**கமு/கமு/ R.K.M. பெண்கள் பாடசாலை - காரைதீவு**

01. திரு. R. குருபரன் - பாட இணைப்பாளர் 076 9844053
02. திருமதி. J. உதயகுமார்

**கமு/கமு/ விபுலானந்தா மகா வித்தியாலயம் - காரைதீவு**

01. திரு. P. பிரபாகரன் - பாட இணைப்பாளர் 076 9367981
02. திருமதி. J. செந்தூரன்
03. திருமதி. J. ஜெயரூபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கமு/கமு/ ஷண்முகா மகா வித்தியாலயம் - காரைதீவு**

01. திரு. A. குமரநாதன் - பாட இணைப்பாளர் 075 2053154
02. திரு. S. சிவராசா
03. திருமதி. M. கரிகரன்

**கமு/கமு/ அல்-அஷ்ரப் மகா வித்தியாலயம் - மாவடிப்பள்ளி**

01. திரு. M.J.M. காசிம் - பாட இணைப்பாளர் 077 4749066
02. திருமதி. S. சகாப்தீன்
03. திருமதி. A.S.S. சமியா

**கமு/கமு/ அல்-குசைன் வித்தியாலயம் - மாவடிப்பள்ளி**

01. திருமதி. I. ஹில்மி மௌஜுூத் - பாட இ. 077 0591910
02. திருமதி. J. சந்திரசேகரம்

## சாய்ந்தமருது கோட்டம்

**கமு/கமு/ அல்-ஹிலால் வித்தியாலயம் - சாய்ந்தமருது.**

01. திருமதி. M.A. பஹீமா - பாட இணைப்பாளர் 076 6530223
02. திருமதி. A.S.S. பர்ஸானா

**கமு/கமு/ அல்-ஜலால் வித்தியாலயம் - சாய்ந்தமருது.**

01. திருமதி. சியாமா தாலிப் - பாட இ. 076 2652013
02. திருமதி. A.L. ஹாபிதா
03. திருமதி. A.L. கமறுன்நிஸா
04. திருமதி. S.M. செரீன் சபான்

**கமு/கமு/ மழ்ஹறுஸ் ஷம்ஸ் மகா வித்தியாலயம் - சாய்ந்தமருது.**

01. திருமதி. A.M. ஜுனைதா - பாட இ. 077 4159224
02. திருமதி. A.M.K. குலாஸா
03. திருமதி. F.S.M. நளீம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கமு/கமு/ லீடர் M.H.M. அஷ்ரப் வித்தியாலயம் - நிந்தவூர்.**

01. திருமதி. M.H. நுபைஸா - பாட இ. 076 7066868
02. திருமதி. M.I. நஜீமா

## நிந்தவூர் கோட்டம்

**கமு/கமு/ இமாம் கஸ்ஸாலி மகா வித்தியாலயம்**

01. திருமதி. N. ஜெயகோபன் - பாட இ. 076 8341360
02. திருமதி. யாக்கூப்
03. திருமதி. J. சித்தீக்
04. திருமதி. W.S. தௌபீக்

**கமு/கமு/ அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலயம்**

01. திருமதி. K. சுதர்சன் - பாட இணை. 076 0273543

**கமு/கமு/ அல்-மினா வித்தியாலயம் - நிந்தவூர்**

01. திருமதி. S.N.M. அஜ்வத் - பாட இணை. 071 1264432
02. திருமதி. R.M. நிலாம்
03. திருமதி. A.F. றிஸ்மிலா

**கமு/கமு/ அரபா வித்தியாலயம் - நிந்தவூர்**

01. திருமதி. A.L.M. நியாஸ் - பாட இணை. 077 7306355

**கமு/கமு/ அல்-மஷ்ஹர் மகளிர் கல்லூரி - நிந்தவூர்**

01. திருமதி. B.A.H. பஸ்மில் மஜீட் - பாட இணை. 077 2488052
02. திருமதி. J. செந்தில் நாதன்
03. திருமதி. N. ரஹ்மதுல்லாஹ்
04. திருமதி. A.S. ஆஸிக்கா
05. திரு. M. சஹாப்தீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கமு/கமு/ அல்-அஷ்ரக் மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை)**

01. திருமதி. A.R.F. றிப்கா ரஸுல் - பாட இ. 076 0331876
02. திருமதி. M.S.F. சபானா
03. திரு. M.Y. அஸ்ரப்
04. திரு. A.C.M. சாதிர்
05. திருமதி. M.F.H. சிம்ரானா
06. திருமதி. V. குமுதினி
07. திரு. M.B. அஹமட் ஹாறூன்
08. திருமதி. M.T. சித்தி நிஹாறா உம்மா

**கமு/கமு/ அல்-மதீனா வித்தியாலயம் - நிந்தவூர்**

01. திருமதி. A. ஆயிஷா பீவி - பாட இணை. 076 1603109
02. திருமதி. M. சப்ராஸ்
03. திரு. M. றூஹுல்லாஹ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dr. பீர்தௌஸ் ஆற்றிய
## ஆய்வுரைகளும் விமர்சன மேடைகளும்

01. கவிஞர் டீன்கபூரின் (S.M.றபியுத்தீன்) **“திண்ணைக் கவிதைகள்”** கவிதை தொகுதிக்கான விமர்சன உரை - 2008

02. கவிஞர் ஜமீலின் **“உடையக் காத்திருத்தல்”** கவிதை தொகுதியின் விமர்சன உரை - 2011.05.17

03. பாடகரும் இசையமைப்பாளருமான யூ.ஜே. நஸாரின் **“மல்லிகை மொட்டுக்கள்”** இஸ்லாமிய கீத இறுவட்டு - சிறப்புரை - 2013.11.26

04. எழுத்தாளர் ஏ.ஆர்.ஏ. 'மீதின் **“மாமி இல்லாத பூமி”** சிறுகதைத் தொகுதியின் ஆய்வுரை - 2014.12.21

05. கவிஞர் நௌபலின் **“மிதக்கும் கனவுகள்”** கவிதை நூல் பற்றய விமர்சன உரை - 2015.11.06

06. கவிஞர் நௌபலின் **“மாம்பழக் கொச்சி”** தலைமை உரையும் அறிமுகக் குறிப்புகளும் - 2013.11.17

07. கவிஞர் ஜமீலின் **“தாளில் பறக்கும் தும்பி”** மருதூர்க் கொத்தன் நினைவுரையும் கவிதைப்பற்றிய பேச்சும் 2015.09.23

08. கவிஞர் நௌபலின் **“பொது நிருவாகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கான ஓர் அறிமுகம்”** சிறப்புரை - 2015

09. சாய்ந்தமருது மருதம் கலைக்கூடலின் விருது விழா - ஆங்கில ஆசிரியரும் மேடை நடிகருமான சக்காப் இஸட் மௌலானா பற்றிய பேருரை - 2014

10. கவிதாயி ஹரீஸாவின் **“உன்மொழியில் தழைக்கிறேன்”** விமர்சன உரையும் தலைமை உரையும் - 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. அல்-மனார், அல்-அக்ஷா பாடசாலைகளின் அதிபர் மர்ஹூம் **எஸ்.எச்.எம். அக்பர்** அவர்களின் நினைவுப் பேருரை அல்-மருதமுனையின் ஏற்பாடு - அல்-மனார் மத்திய கல்லூரியில் - 2016

12. சாய்ந்தமருது கரவாகுச்சந்தி இலக்கிய வட்டம் நடத்திய **"சோலைக்கிளியின் கவிதைகள்"** பற்றிய வாசிப்பு-2016

13. எழுத்தாளரும் விமர்சகருமாகிய ஜெஸ்மி எம் மூஸாவின் **"முகநூல் முகவரிகள்"** கவிதைத் தொகுப்பு பற்றிய விமர்சனம் - 2017

14. கவிஞர் அலறியின் விலைப்பட்டியல், கொலைப்பட்டியல், மு.கா. தேசிய பட்டியல் - இரு நூல்களின் தலைமை உரையும் விமர்சனமும் - 2017

15. அல்-ஹாஜ் ஏ.ஆர்.ஏ. சத்தார் அவர்களின் **"மருதாபுரி"** நாவல் பற்றிய விமர்சன உரை - 2017

16. ஆய்வாளர் மருதமுனை ஆபித் அவர்களின் **"சங்க காலக் கவிதைகள்"** நூல் பற்றிய முன்னுரையும் விளக்க உரையும் - 2018

17. கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம் (KKKR) நூல் பற்றிய முன்னுரை.

18. ஜே.எம். பதுறுல் பெளஸ் எழுதிய **"உபாக்கியான அந்தாதி"** தண்டமிழ் பெரிய வாத்தியார் பற்றிய முன்னுரை - 2018

19. தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவி கவிச்சாரல் சாராவின் **"விழிகள் தேடும் விடியல்"** பற்றிய ஆய்வுரை இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபுமொழி பீடம் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் - 2018

20. தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவி அப்றா இல்யாஸின் (மாவனல்ல) **"சிறகடிக்கும் நிலவு"** அணிந்துரையும் சிறப்புப் பேச்சும் - இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடம் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் - 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. மருதமுனை மூாகிர் G.S. அவர்களின் **"நாணிய நடுக்காடு"** கவிதை நூல் பற்றிய ஆய்வுரை - 2020

22. கல்வியலாளர் அக்கரைப்பற்று அ.ச. அகமட் கியாஸின் **"இனி எல்லாம் சுகமே"** நாவல் விமர்சன உரை - 2020

23. கவிதாயினி சூபாவின் **"சுவாசித்துக் கொண்டிருக்கிறேன்"** கவிதை நூலின் முன்னுரைக் குறிப்புகள் - 2020

24. கவிஞரும் எழுத்தாளருமாகிய எம்.எம். நௌபலின் இரு நூல்கள் வெளியீட்டின் தலைமையும் நூலுரைகளும் -
    - மன மைத்துனம்
    - ஆண் மழை பெய்யும் காலமும், பெண்மயில் நடனமும்

25. கல்முனை அஸ்மியா அக்ஷரபின் **"நிழலாய் அவள்"** சிறுகதைத் தொகுதியின் அணிந்துரை - 2021

26. கவிஞர் றியலாஸின் **"யசோதரையின் வீடு"** கவிதைத் தொகுதி பற்றி ஆய்வுரை - 2021

27. மருதமுனை ஜெமீலின் **"உடையக் காத்திருத்தல்"** கவிதை நூல் வெளியீட்டு விழாவில் நயவுரை - 2011

28. எம்.எம். நௌபல் எழுதிய **"இலங்கை முஸ்லிம்களால் எதிர்கொள்ளப்படும் சவால்கள்"** நூல் பற்றிய உரை - 2016

29. பைந்தமிழ் குமரன் ஜெ. டேவிட் எழுதிய **"கானல் வசந்தங்கள்"** சிறுகதைத் தொகுதி பற்றிய ஆய்வுரை - 2016

30. கவிஞர் ஜமீல் எழுதிய **"அவன் பையில் ஒழுகும் நதி"** கவிதை நூல் வெளியீட்டில் தலைமையுரையும் நுல் பற்றிய உரையும் - 2017

31. ஒலுவில் ஜே. வகாப்தீன் எழுதிய **"குலைமுறிசல்"** நாவல் வெளியீட்டு விழாவில் விமர்சன உரை ஒலுவில் அல்-ஹம்றாவில் நடைபெற்றது - 2017

32. கவிஞர் எம்.எம். விஜிலியின் கவிதைத் தொகுதியான **"உன்னோடு வந்த மழை"**இல் தலைமை உரையும் விமர்சனமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைமகன் வாழ்க வாழ்க...

சான்றோர்கள் சூழ்ந்த
சபைதன்னைக் கண்டேன்
மரியாதை கண்டு
மகிழ்வோடு நின்றேன்...

பேராளர் கூடிப்
பெருமகனை வாழ்த்த
பூவோடு சேர்ந்த
நாராக நுழைந்தேன்...

நிலவோடு வானும்
விளையாடும் மண்ணில்
கரையோடு அலைகள்
கவிதைகள் பயிலும்...

நூலோடும் இழையில்
நின்றாடும் பதியில்
புகழ்பூத்த மரபில்
பிறந்தவரே பிரதவுஸ்...

அறிவென்னும் கடலில்
அழகான நதியாய்
கலந்திட்ட குருவே
கலங்காதே உறவே...

புலவர்மணிக்கிளையில்
இனித்திட்ட கனியே
மருதமுனை மண்ணின்
மங்காத மணியே...

மாசற்ற மனதால்
மலைபோலே உயர்ந்தாய்
மணக்கின்ற தமிழால்
மனங்களில் மிளிர்ந்தாய்...

கல்விச்சாலைகள் எங்கும்
சலவைகள் செய்தாய்
கீழோரை எல்லாம்
மேலோராய்க் கண்டாய்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனை கல்வி வலயத்தைக்
கண்போலக் கொண்டாய்
கொடுத்த பணியினைக்
கருத்தாகச் செய்தாய்...

சென்ற இடமெல்லாம்
சிந்தையை வென்றாய்
சிங்காரத் தமிழாலே
சிலாகிக்கச் செய்தாய்...

கிழக்கின் நாவலை
கிரகிக்கச் செய்தாய்
கலாநிதி மாலையை
சூடியே வென்றாய்...

கவிஞனாய் கலைஞனாய்
உரைஞனாய்
நடிகனாய்...

நாட்டியம் நாடகம்
நிறைந்திட்ட ஓவியம்
நீதானே
நட்புலக நாயகா...

மலரும் போதே
மலருக்குத் தூது விட்டாய்
புலர்ந்து வருகையில்
காதலை வாழவைத்தாய்...

அழகு மங்கையை
அறிவின் திங்களைக் கரம் பற்ற
இல்லறம் நல்லறமாய்
ஜொலித்து மணத்தது...

சபீனா என்ற மாதரசி
அன்பிலே பண்பிலே
உன் வெற்றியின் பங்கிலே
உயர்ந்து நிற்கின்றார்...

வறுமைச் சகதியை
வலியோடு கடந்து
குடல்வாய் உறவினை
கரையேற்றி விட்டவனே...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கிய கடலும்
பாசந்தாயைக் கவர்ந்து போக
வங்கப்புயல் வந்து
தந்தையை அள்ளிச் செல்ல....

தத்தளித்த தளிர்களைத்
தலையிலே தாங்கி
நீ பட்ட துயரங்கள்
ஆயிரம் ஆயிரம்...

அத்தனை வலிகளையும்
வழியாக மாற்றினாய்
எதிர்கொண்ட தடைகளையே
படிக்கல்லாய் மாற்றினாய்...

கொடி சுமந்த பூக்களை
பட்டை தீட்டிப்
படரவிட்டாய்
காலம் இப்போது
இனிக்கிறது உனக்கு...

தலைமகனோ
புகழ்பெற்ற சட்ட முதுமாணி
நீதிமன்றமே
உற்றுப் பார்க்கிறது அவன்
மொழிவண்ணம் கண்டு.

இளய மகன்
மருத்துவ உலகில்
முடிசூடா மன்னனாய்
நடைபோடக் கடைக்குட்டி சிங்கம்
தந்தையைப் போலேக்
கால் தடம் பதிக்கிறான்.

சோதனையின் குரல்வளை
மிதித்துச்
சாதித்த நாயகன்
ஓய்வென்னும் விடைபெறும்
நாளாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை இல்லை
இவனுக்கு ஓய்வில்லை
காற்றுக்கு வேலியில்லை!

கடலுக்கும் கதிருக்கும்
ஓய்வுண்டா
கரைதுள்ளும்
அலைகளுக்குத்
தடையுண்டா - கூறுங்கள்...

சாகாத தமிழும்
நாவிருக்க
ஓயாத சிந்தனை
ஒளிந்திருக்க
ஒரு நாளும் இல்லை
என் நண்பனுக்கு .......

நண்பா நிறைந்த சபையில்
நாயகனாய் வீற்றிருக்கும்
உன்னை
உளமுருகி
வாழ்த்துகின்றேன்
வாழ்க வாழ்க
பல்லாண்டு .......

தங்கை சபீனா
மருமக்கள் பேரன்
பேத்திகள் எல்லாம்
வாழ்க வாழ்கவென
வாழ்த்துகின்றேன் .......

கவிஞர், கிழக்கு வானம்
**முஸ்தபா மௌஜூத்** B.A.
25/12/2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதூர் கருமகன் "மனதூர்" கலைமகன்!
மாண்புறு "ஜென்னத் உம்மா"
மகாகருவில் "ஜனனித்தஅகன்"!

திருமிகு "அப்துல்சத்தார்" திருஒளியாய் உதித்தமகன்!
தேசகீர்த்தி அல்லாஹ்வின் திருமறைப் பண்புயுவன்!
அருமையாய்க் கல்வி ஆற்றொழுக்காய் உயர்வீச்சு!
அருணன் ஒளியென "அதிகப்பட்ட" ஒளிவீச்சு!

கருத்தாழும் தமிழாழும் கல்விநலம் ஏராளம்!
கலாநிதி பிர்தௌஸ் ஐயா, கடமைத்துவம், பாராளும்!

முகமட்சாலி சித்திசபீனா, மணவாழ்வின் மகாசாலி!
முத்தமிழாம் "மூமகவும்" மகத்தான புத்திசாலி!
சகவாசம் படிப்பகத்தில் "சீர்வாசம்" பணியகத்தில்!
"சிரசு", பல்கலையில்
"சிகரம்" நவகலையில்!

அகரம், ஆயுள்வெளி ஆயுளோ, நீள்வெளி!
அறிவகம் வந்தாலோ, அறிவுரைப் பெருவெளி!
சுகம்தரும் செயலமர்வு சுவைதரும் மனப்பகிர்வு!

செல்வக் களஞ்சியமே, செம்மொழியும் வாழ்த்திடுமே!
தகைமைகளோ சுரங்கம் தமிழ்ப் பணிகளோ தங்கம்!
தமிழுக்கோ, "நீங்கள் வரம்" தலைமுறைக்கோ, "நீங்காவளம்"!
பகைகொண்ட பார்வையில்லை நகையிழந்த நாட்களில்லை!

பள்ளிகளோ, ஐம்பத்தைந்து புள்ளிகளோ, பூஜ்ஜியமில்லை!
தகைசால் கல்விப்பணிப்பாளர் தம்சேவையில் பதினொருபேர்!
தரமான பணிகளாலே திறமுற்றோர் நிறையப்பேர்!
ஈகைக்குள் மொழிவாழும் மொழியதற்குள் விழிவாழும்!
ஈரமுள்ள மல்லிகையே!, மறக்கவேண்டாம் பள்ளியையே!

**கவிதையாக்கம் :**
**விவேகவெளி தமிழேந்திரன் (சரவணமுத்து நவேந்திரன்)**
கமு/கமு/ பெரியநீலாவணை விஷ்ணு மகா வித்தியாலயம், கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டியின் சம்பியனாக....




மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியின் முதலாவது ஆங்கில தின விழாவில்...











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமண நாள்
- 1991.07.25 -



காதல் மனையாளோடு...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விழா நாயகனின் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூத்த மகனும் மருமகளும்...




பேரன்
சொஹான் ஹைஹடின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தனது மாணவர்களுடன் (2020/2021)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஷைலஸ் மத்திய கல்லூரி ஆசிரியர் குழாத்துடன்... (1990)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராதனை பல்கலைக்கழக நண்பர்கள் (84/85) ஒன்றுகூடலின் போது பேராசிரியர் அனீஸ் அவர்களுடன்




கவிஞர் கிழக்குவானம் எம். மௌஜூத்துடன் தோப்பூரில் ஆய்வுரை ஒன்றினை நிகழ்த்த அமர்ந்திருந்த வேளை...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில்
தனது ஆசிரிய மாணவர்களுடன் - 2022




இடர்கால கல்வி உபாயத் திட்டமிடல் -
கல்முனை வலய ஆசிரியர்களுக்கான செயலமர்வு - 2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Cycling Green அணியில்...



மொனராகலையிலிருந்து கல்முனை நோக்கிய பயணத்தில்...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலையிலிருந்து கல்முனை நோக்கிய சைக்கிள் சவாரியில்
கிண்ணியா பெரும்பாலமும் மழையும்




றெயோ, அன்பஸ், அம்ஹஸ் - பிரான்ஸ் பெண்மணியுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராதனை
பல்கலைக்கழகத்தில்
அரங்கேற்றத்திற்கு
முன்னதாக
*(1989)*



அன்றைய கல்வி இராஜாங்க அமைச்சர் இராஜமனோகரி
புலேந்திரனிடமிருந்து விருது *(1992)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அல்-மனார் தேசிய பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் அதிபருடன்...



அல்-மனாரின்
சீகிரியாவிற்கான
சுற்றுப் பயணத்தில்
றெயோ அகமட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நூல் ஆய்வின் போது... (2021)



பாடசாலை தரிசிப்பின் கடைசித் தினம். காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கமு/ றியாலுல் ஜன்னா வித்தியாலய முதல்வர், இலங்கை வானொலி அறிவிப்பாளர் ஏ.எம். அன்சாருடன் பாடசாலை தரிசிப்பு சம்பந்தமாக...




தரிசிப்புக் குறிப்பு - பாடசாலை பதிவேட்டில்... பணிநிலை ஓய்வுக்கு முதல் நாள் - கமு/ றியாலுல் ஜன்னா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வாசிப்பு மாத வேலைத்திட்டம் - 2022 - அல்-மனார் மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலாநிதி சத்தார் எம். பிர்தௌஸ் BA, MA, MPhil, PhD (Sri Lanka)**

கிழக்கிலங்கை தமிழ் நாவல்களில் ஆய்வுகளைச் செய்து தனது கலாநிதி பட்டத்தைப் பெற்றிருந்தார். பரதநாட்டியத்தை முறைப்படி கற்று அரங்கேற்றம் செய்தவர். மேற்கத்தைய நடனங்களையும் முறைப்படி கற்றவர். அதனை விடுத்து திரைப்பட நடிகர், நாடக நடிகர், மேடையாளர், இயக்குனர், சிறந்த குரல்வளமுள்ள அறிவிப்பாளர், கதைஞர், கவிஞர், விமர்சகர், ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர், கல்விப் பணிப்பாளர், விரிவுரையாளர், அறிஞர், ஆய்வாளர் என பல்வேறு பரிமாணங்களைக் கொண்டவர். கல்வி உளவியல், இலக்கியம், மொழி போன்ற துறைகளில் சுமார் பத்துக்கு மேற்பட்ட பிரதிகளை எழுதியவர். இதற்கு அப்பால் மிகுந்த நகைச்சுவை உணர்வும், நேர்மறைச் சக்தியும், இளமையும், எளிமையும், மனித நேயமும் கொண்ட பழகுவதற்கு இனிமையான கலாநிதி சத்தார் எம். பிர்தௌஸ் அவர்களுக்கு இன்று (11.11.2022) 60 ஆவது பிறந்த நாள். அவர்களை வாழ்த்துவோம்.

**ஏ.எம். றியாஸ் அஹமட்**
(அம்ரிதா ஏயெம்)
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பிரயோக விஞ்ஞான பீடம்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org